345

17 JUL 1981

Registered No. M. 2445.

உ
சிவமயம்.

"வீரசைவம்."

பொம்மபுரம்
ஸ்ரீ சிவஞானபாலைய தேசிக சுவாமிகள்
அருட் கொடையால்,
தமிழ்நாட்டு வீரசைவ மகாசங்கத்து நிறைவேற்றக்
கழகத்தினின்றுவரும்
செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

மலர் க | சுக்கில ஆண்டு ஐப்பசித்திங்கள் 1929—அக்டோபர். | இதழ் க0

க. பிரபுதேவர் :—

உ. ஸ்ரீபசவேச விஜயம் :—

ங. சொற்பெருக்கு :—

ச சுதருமம் :—

ரு. சமஸ்காரம் :—

சா வீரசைவ வைதீகத்துவம் :—

எ. வீரசைவ விசேட இலக்கணம் :—

அ. நமது பத்திரிகையின் முன்னேற்றம் :—

கூ. தமிழ்நாட்டு நிகழ்ச்சிகள் :—

பத்திராசிரியர் { வீ. குமாரவீரையர்,
'வீரசைவநிலையம்' முசிரி, திருச்சிஜில்லா.

விவேகபானு பிரஸ் பிராஞ்சு, குளித்தலை.

வீரசைவ சித்தாந்த மகாசங்கம்.

---)o(---

கனம் ஸ்ரீ காரியதரிசிகட்கும் பொறுப்பாளர்கட்கும் விஞ்ஞாபனம்:—

நமது மகாசங்கத்தின் நிறைவேற்றக் கழகத்துறுப்பினர்களாகிய பொறுப்பாளர் முதலியோரது பதவிக்குரிய மூன்று வருடம் 1930 மே மாதத்துடன் முடிவடைகின்றது. 1930 மே மாதம் கோடை விடுமுறையில் கூடும் ஏழாவது மகாசங்கத்தில் **புதிய தேர்தல்** நடைபெறுதல்வேண்டும். அந்தந்த வட்டகைக்குரிய பொறுப்பாளர்களும் தத்தமக்குரிய வரவு செலவுகளைச் செப்பனிட்டுக் காரியாலயத்திற்கு அனுப்பிவைத்தல்வேண்டும். தத்தம் காலவளவில் வசூலிக்க வேண்டிய உறுப்பினர்ச் சந்தாத் தொகையை வசூலித்து வரவு செலவைச் செவ்வையாக நேர்செய்வது தத்தம் கடமையல்லவா? அது பின்வருவோர்க்கும் எடுத்துக்காட்டாகுமல்லவா? ஆதலால் இடையிடையே ஓய்வுநேரும்போதெல்லாம் சிரமத்தைப் பாராது வெளியிடங்கட்குச்சென்று ஆறு ஆண்டுவரையுள்ள சந்தாத்தொகைப் பாக்கியில்லாமல் வசூலித்துக் கணக்கை முடித்து அனுப்பிவைத்தல் வேண்டும். காரியதரிசிகளும் பாக்கிப்பட்டியை எழுதிக்கொடுத்து உடனிருந்து உபகரித்தல்வேண்டும். அவரவர்களுடைய வேலையின்முடிவெல்லாம் இப்பத்திரிகையிலேயே வெளியிடப்பெறும், ஆதலின் உங்கள் கனமான எண்ணத்தையும் கடமையையும் நாடுகின்றேன்.

த. காரியதரிசி.

கட்டுரை யெழுதும் கல்வியிற் பெரியார்க்கு :—

ஐயன்மீர்!

நமது வீரசைவத்திற்கு எழுதியிருக்கும் கட்டுரைகளிற் சில முன்னரே யெழுதப்பட்டவையாயுமிருக்கலாம். ஓரே கருத்தைப் பற்றிப் பலர் எழுதியுமிருக்கலாம். சில காலத்தின் சமூகத்தின் நிலைமைக்கு ஏலாதவையாயுமிருக்கலாம் அவற்றின் பொறுப்பெல்லாம் பத்திராசிரியரைச்சார்ந்தவையாயிருத்தலின் சிலவற்றைத் திருத்தஞ் செய்தலும், விளம்பரஞ்செய்யாது விடுத்தலும் நேரும். அதுபற்றி பெரியார் மன்னித்தல் வேண்டும்.

பத்திராசிரியர்.

17 JUL 1931

உ

சிவமயம்.

“வீரசைவம்.

பொம்மபுரம் ஸ்ரீசிவஞானபாலயதேசிகசுவாமிகள் அருட்கொடையால்
தமிழ்நாட்டு வீரசைவ மகாசங்கத்து நிறைவேற்றற் கழகத்தினின்று
வரும் செந்தமிழ்த்திங்கள் வெளியீடு.

மலர் ௧	சுக்கிலஆண்டு ஐப்பசித்திங்கள் 1929—அக்டோபர்.	இதழ் ௧௦

பிரபுதேவர்.

(திரு. உருத்திரசாமி ஐயர் அவர்கள், தமிழ்ப்பண்டிதர், புலிசை.)

புண்ணியம் நிறைந்த பூமியில் வள்ளிகாவை எனும் பதியில் நிராங்காரன் சஞ்ஞானிகள் ஆம் இருவர் வசித்தனர். அவர் இலிங்காயதராகிய வீரமாகேசர் மரபிற்றோன்றியவர். இல்லறமே நல்லறமென மேற்கொண்டு ஒழுகினர். நிராங்காரன் மன்னுயிர்களையும் தன்னுயிர்போல் கருதி உற்ற விடத்துதவும் கருணையாளன். சாந்த குணமே வடிவமாயினோன். அசுத்த துக்க அநித்தியங்களே இயல்பாயுள்ள தேகபந்தத்தை யான் எனவும், மனைவி மக்கள் மாதா முதலிய போகபந்தத்தை எனது எனவும் மனத்தின்கண்வைத்துக் கருதும் மயக்கமாகிய இருளைத் துரந்தவன். எனக்கு இது செய்தார் யான் இது செய்தேன் எனும் மயக்கம் சிறிதும் இல்லாதவன் ஆதலால் உலகர் அவனை நிராங்காரன் என்று உண்மையாகவே அழைத்தனர். அவன் தேவி கணவன்சொல் திறம்பாக் கற்புடைக்காதலி. கொண்கன் குறிப்பறிந்து ஒழுகும் குணமுடையாள். சினந்திடல் சிறிதும் இலாள். தோன்றும் பொருள்களுள் மெய்ப்பொருள் ஈதெனத் தேரும் அறிவுடையாள். ஆவதை முன் அறியும் திறலினள். இவளைச் சஞ்ஞானி என்று விளித்தனர் பெரியோர். இருவரும் குருசொற்ற நூலினையே ஞானத்திருவுற்ற நூலாக்கொண்டு அநுட்டித்தனர். வேதநெறி சைவநெறிகளைத் தமக்கோர் உயர்ந்த அணிகலமாகத் தரித்துள்ளவர். பிறந்த அப்பொழுதே ஒருதலையாப் பிறப்பறுத்திடுவம் எனும் துணிபுடையவர். ஈதலே யறம் அநித்தியமாகிய அனைத்தும் இகழ்ந்து கைவிடுதலே வீடு எனும் கருத்துடையவர். தோன்றும் பொருள்கள் அனைத்தும் அழிபவை, சிவம்ஒன்றே அழியாதது எனும் முடிந்த

முடிபுடையவர். இம்மை மறுமைப்போகங்கள் அனைத்தையும் கான்ற சோறெனக் கைவிடும் திறலினர். கேடும் ஆக்கமும் கெட்ட திருவுடையார். ஓடும் பொன்னும் ஒக்கவே நோக்குவார். காமாதி குணங்களால் நிகழும் தீச்செயல்களை முற்றும் கடிந்தவர்.

மனையை விளக்கும் மாண்புடைப் பொருளாகிய மகவின்மையால் நெஞ்சம் தளர்வான்போல் தளர்ந்தான் நிராங்காரன். தியானம் இல்லாத நெஞ்சையும் ஞானம் இல்லாத செயலினையும் ஒத்ததே மக்கள் இல்லாத இவ்வாழ்வு என அயர்ந்தான். உலகவாழ்விற்கு இன்றியமையாத உணவாதிகளைத் தேடித் தருவதற்கு ஒரு மைந்தனை வேண்டுபவன் அதம பிதா, நிரயமாகிய நரகத்து அழுந்தாது நீர்க்கடன்களை இயற்ற ஓர் புத்திரனை விரும்புவோன் மத்திம பிதா, அத்துவித ஆனந்தத்தை அடைய ஓர் சுதனைக்கருதுவோன் உத்தம பிதா; ஆகவே தேகமே ஆன்மா வென்றும், இந்திரியமே ஆன்மா வென்றும், அந்தக்கரணங்களே ஆன்மா வென்றும், பிராணவாயுவே ஆண்மாவென்றும் மயங்கி உழலாமல் அறிவாகாரமாகிய ஆன்மாவைத் தன்னுட்கண்டு ஒன்றென்றும் இரண்டென்றும் வாதியாத நன்முத்தியைஅளிக்கின்றதோர் சுகுமாரனை விரும்பினன்.

"மூலாதாரமாகிய நான்கிதழ்த்தாமரை, சுவாதிஷ்டானமாகிய ஆறிதழ்த் தாமரை, மணிபூரகமாகிய பத்திதழ்த்தாமரை, அநாகதமாகிய பன்னிரண்டிதழ்த்தாமரை, விசுத்தியாகிய பதினறு இதழ்த்தாமரை, ஆக்ஜையாகிய இரண்டிதழ்த்தாமரைகளைக்கடந்து, பிரமரந்திரத்திற்கு மேற் பன்னிரண்டங்குல அளவில் விரிந்துள துவாதசாந்தமாகிய ஆயிர இதழ்த் தாமரையில் முளைக்கும் சோதியைக்கண்டு எம் எண்ணம் முடிப்பேம்" எனத் துணிந்து எழுந்தான்.

தவத்திற் கொருவரே எனும் கொள்கைக்கு மாருக மனைவியும் தானும் வனத்திற்குச் சென்றனர். பதுமாசனத்தில் அமர்ந்தனர். கரதலத்து விளங்கிய உள்ளம் நிறைந்த செல்வமாகிய இட்டலிங்கத்துத் தேனர் புனல்போல் தெளிந்த மனம் பொருந்த இமையா நாட்டத்தொடு இருந்தனர். தறிக்கப்பட்ட குற்றியோ என அசையாது நிமிர்ந்து இருந்தனர். பக்கநாடிகளாகிய இடைகலை பிங்கலைகளால் காற்றை ரேசித்துத் பூரித்தனர்; நடு நாடியாகிய சுழுமுனையால் கும்பித்தனர். அறிவு ஓர் சிறிதும் அசையாது அமைந்தனர். அம்சப்பெயர் மந்திரத்தை எழுத்து நிலை மாற்றி உச்சரித்தனர். குணம் குறி கடந்த

பொருளைக் குறிக்கோளாகக்கொண்டு நின்றனர். நாடிகள் மூன்ற னுள் ஒன்றினால் வாயுவை வாங்கி, ஒன்றினால் விடுத்து, மற்றொன்றி னால் தடுத்து நிறுத்தினர். ஓடும் நீர் நிற்க அதன்கண் மிதக்கும் துரு ம்பு நிற்பதுபோல், வாயு நிற்க அதனொடு இயங்கும் மனமும் நின்றது மனம் ஒடுங்கவே மெய் வாய் மூக்குக் கண் செவி எனும் இந்திரியங் கள் தம் செயல் அற்று இருந்தன. பொறிகள் செயல் ஒழியவே ஊறு சுவை நாற்றம் ஒளி ஓசை எனும் புலன்களைந்தும் தோன்றாவா யின. "அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும் வேண்டிய வெல்லாம் ஒருங்கு" எனும் வேதவாக்கியத்திற் கிணங்க புலன்கள் ஒழியவே ஏனைய தத்துவங்கள் செயல் அற உலகம் தோன்றாது, பரி சுத்தமானதும் மேலானதும் இன்பமயமானதும் ஆன பரஞ்சோதி தோன்றக்கண்டு மகிழ்ந்திருந்தனர்.

இன்னணம் அவ்விருவரும் ஒன்பது திங்கள் முடிய சிவயோக சமாதியில் அமர்ந்திருந்தனர். பின்னர் நெற்றியின்மேல் தோன்றிய பரஞ்சோதியே குழவி உருவாகத் திரண்டு புறத்தில்வந்து திகழ்ந்தது. நிராங்கார சுஞ்ஞானிகள் தங்கள் விழிகள் திறந்து கண்டார்கள். உள் ளத்தில் தம்மை அறியாத ஆனந்தத்தை அடைந்தார்கள்.

வெப்பம்தணிந்து நிலத்திலிழிந்தசூரியனோ, தட்பம் நீங்கித் தரை யில் வந்த சந்திரனோ, விறகில் வெளிப்படாத செந்நிறம் பரந்த அக்கி னியோ என்ன ஒளிர்ந்தது அச்சோதிமதலை. இன்னும் அஞ்ஞான மாகிய பேரிருளை அகற்றி உயர்ந்து ஓங்கும் சத்து சித்து ஆனந்த விளக்காக விளங்கியது இக்குல விளக்கு. யான் எனது எனும் செரு க்கற்று நல்லறிவினர்களாய நிராங்கார சுஞ்ஞானிகள் இச்சோதிமதலை யைப் பெறுவார்களே யன்றி ஆங்காரமாம் அகப்பேய் பிடித்து அஞ் ஞானமாம் ஆவரணமுறும் மானிடரும், தேவர்களும், முனிவர்களும் மற்றவர்களும் பெறுவார்களோ! பெறார். அசுத்த அநித்திய அபூ ரண விஷயாநந்தத்தை அனுபவிக்கும் மானிடர், சுத்த நித்திய பூரண பேரானந்தத்தைப் பிள்ளையாய்ப் பெற்றவர்கட்கு நிகராகார்! அவர் தம்மைத் தாமே ஒப்பார். பாசம் நீங்கிப் பரமானந்த பரஞ்சோதி யைத் தம்முட்கண்டு களித்தவர் மிக அரியர். அவர்களும் புறத்தே காட்டினவர் அல்லர். அன்பு நிறைந்த நிராங்கார சுஞ்ஞானிகளோ உள்ளேகண்டு உவகைப்பூத்த சோதியை உலகம் உய்யக்குழவியாக்கிக் காண்பித்தனர்.

அம்மகவு தோன்றும் பெருநாள் எவர்க்கும் ஒரு திருநாளாகப் பொலிந்தது. சங்கம் முழங்கின. துந்துபி தழங்கின. மலர்மழை பொழிந்தன. திசைகள் எங்கும் விளங்கின. மலடு கன்று ஈன்றன. தறிகள் தளிர்த்தன. தெளியா நீரும் தெளிந்தது. மாதவர் மனம் மகிழ்வுற்றன. பாதகர் மனமும் பண்புற்றன. நையாமனத்து நிராங்காரன் ஞானத்திரளாம் பிள்ளைதனை "அகத்தும்கண்டோம் புறத்தும் காண்கிறோம்" எனக் கரைகாணு வுவகைக்கடலிற் படிந்தான். அதனை மார்பொடு தழுவினன் உச்சி மோந்தான் உள்ளம்பூரித்தான். கையால் எடுத்தான். எங்கும் நிறை கனவான் இலேசாகிக்கனவான். சுஞ்ஞானியும் கொழுநன் பாதமலர்களைப்பணிந்து "நமக்கு வாய்த்த இப்புண்ணிய மகவின் தன்மை எத்தன்மைத்தோ அதனை உரைத்தருளுக" என வேண்ட 'சைவாகமமும் வேதமும் உணர்ந்து ஓதற்கரிய இம்மகவின் தன்மையினை யான் எவ்வாறு எடுத்துரைப்பேன். இவனே பரமன். இவனே பழையோன். இவனே பிரமன் மால் காணுப் பெரியோன். அயனுக்கு ஆக்கல் தொழில் தந்தவன் இவனே. கண்ணனுக்கு ஆக்கலோடு காத்தல் தொழிலும் தந்தவன் இவனே. முக்கண்ணனுக்கு ஆக்கல் அளித்தல் அழித்தலாகிய முத்தொழிலும் தந்தவன் இவனே. இவனே அத்தொழில்கள் அனைத்தையும் நினைவு மாத்திரையின் நிகழ்த்துவான்.' என்று விதந்து கூறினன் கூரிய அறிவுடைத் தந்தை. "ஈன்ற பொழுதினும் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்டதாய்" எனும் மறை மொழிக்கு ஒக்க, மயக்கம் விளைக்கும் போகத்தால் அல்லாமல் சிறப்பைச் செய்யும் தவயோகத்தால் பெற்ற பொழுதினும் தன்மகனை இருந்து சான்றோன் எனக்கேட்ட சுஞ்ஞானித்தாய் அலகிலா ஆனந்தம் கொண்டனள்.

ஞானசாரியன் திருவருளினல் சிவஞானத் தெளிவுபெருது மயக்கமுற்ற மனமுடையவர் பலர் "தாங்கற்ற கலைகளால் கண்டறிந்ததே உண்மைப் பொருள். வேதம் விளக்குவதும் இதுவே. ஆகமம் அறிவிப்பதும் இதுவே" என உத்திகொண்டு சாதியாநிற்பர். அன்றியும் எதிர்ப்படும்சமயங்களையும் நிந்தைசெய்வர். அன்னோரது சமயக்கொள்கையினை "இது அறிவுடையது அல்ல. இது உண்மையானது அல்ல இது இன்பம் விளைப்பது அல்ல" என்று தவிர்த்து உண்மை அறிவினை நல்கும் ஞானவள்ளல்ஆதலால் இவற்கு அல்லமாப்பிரபு எனும் நாமம் சூட்டினர்.

இவன் முன்செய் வினைவழி வந்தவன் அல்லன். எவராலும் படைக்கப்படாதவன். அருள்வழி தானே வடிவங்கொண்டனன். ஆதலின் நினைத்த காலத்துத் தவழ்ந்தான். இருந்தான். நின்றான் பைய நடந்தான். அணி வீதியில் ஆடல் புரிந்தான். 'எம் ஆவியே வருக! அமுதே வருக! எக்குலதீபமே வருக! கேடறும் செல்வமே வருக! பாசவிநாசனே வருக! ஞானவிநோதனே வருக!' என்று ஆதரவுடன் அழைக்கும் அன்னைமேல் வீழ்ந்து ஆசை விளைவிப்பன் அமலனும் அல்லமன். மாயை தந்த வடிவு நாமங்களைப் போக்கிச் சத்தாகிய பரம்பொருளைப் போதிப்பவன்போல் சிறு பெண்கள் அமைத்து விளையாடும் சிற்றில்களைத் தாள்கொடு சிதைத்தனன். தான் ஆட உலகம் ஆடும் எனும் பொருளை அறிவிக்குமாறு பொன்மயமாகிய சிறு தேரினை உருட்டி ஆடினான். இப்பம்பரம்போல் யான் அடக்காத தீய மனம் சுழலும் எனப் புதிய பம்பரத்தை ஆட்டிக்காட்டினான். கண்ணாடிகொண்டு முகத்தை அறிவார்கள்போல் ஆசிரியன்பால் அருங்கலை பயின்றனன். இன்னணம் ஆடல்புரிந்து அன்னையார்க்கும், அருங்கலைகற்று அருந்தந்தையார்க்கும் இன்பத்தை ஊட்டிய செல்வன் உலகெங்கும் நிறைந்துள அன்பராம் புத்திரர்களுக்கும் அருளமுதம் ஊட்டநினைந்து பெற்றோர்களை நோக்கி "உங்கள்பாவனை ஒருமையால் குழவியாக வந்தேன். உவகை தந்தேன். உலகு எங்கும் தங்கும் மாதவர் முனிவர் பலர்க்கும் அருள்செயச் செல்வன்" என்று புகல "பிறவிக்கடலினிடைப்பட்டுத் துன்புறும் எமக்கு ஓர் பெரிய புணை போல் வந்த அடியேங்களை நீங்குவையேல் முத்தியங்கரை காண்கிலோம். ஆழ்கடலில் அமிழ்வோம்." என மனம் உளைந்து உருகி உரைத்தனர் பெற்ற தனத்தை இழப்போர் போன்ற பெரியோர்.

"நும்மை ஒரு சிறிதும் நீங்குவேன் அல்லேன். நான் சொற்றதில் ஐயம் வேண்டாம். உளதேல் முதனூல்களில் வல்ல முதியோரை நிராங்கார சுஞ்ஞானிகளை இவண் வந்த அல்லமன் அகல்வனோ என வினவித் தெளியுங்கள் என்று கூறி 'பொன்றும் உடல் நீ அன்று' பொறிநீ அன்று, புலன்நீ அன்று, கரணம்நீ அன்று, உயிர்நீ அன்று என ஒவ்வொன்றினையும் நியதிகளைய நின்ற அறிவாகிய உன்னின்றும் என்றும் பிரியேன்" எனும் உண்மையினை உணர்த்தித் தான் அதுவாம் தத்துவத்தைத் தெளிவுபெற உபதேசித்து அவர்கள் உணருமாறும் உணர்த்தினன் அல்லமப்பிரபு வெனும் குருராயன். பின்னர் எள்ளில் எண்ணெய்போல் விறகில் தீப்போல் மலரில்மணம்போல் வியாபகமாய் நிற்கும் ஞானவள்ளல் முலைக்கண் தோன்றும் தீம்பால் என அன்பர்பால் அடைந்து அருளச்சென்றனன். (தொடரும்)

ஸ்ரீபசவேச விஜயம்.

திருவாளர் G. C. வீரப்பா B. A., L. L. B, அவர்கள்.

(முன் தொடர்ச்சி.)

நம் பசவேசர் குருகுல வாசஞ்செய்யும் இளமைப்பருவத்திற்றானே உயர்ந்தோர் மேற்கொள்ளும் கல்விதானத்தைக்கைக்கொண்டு மாடு மேய்க்கும் ஏழைச்சிறுவர்கட்குப் பொருட்செலவு முதலியனவின்றி இலவசக்கல்வி கற்பித்துவந்தார் என்பது உலகமறிந்ததொன்று. சிறுவர்கள் மாடுகளை ஓட்டிக்கொண்டு வீட்டிற்சேகும்பொழுது சிறிது நேரம் அவர்களை ஒழுங்குபெற நிருத்தி மறுநாளிலும் தம்மைவிரும்பி வந்து கேட்குமாறு இனிமையும் வேடிக்கையுமான ஒன்றையொன்று தொடர்ந்து முற்றுப்பெறாது நிற்கும் சிறு சிறு நீதிக்கதைத்தொடர்பைக்கூறி அவர்களைப்போய்வர விடுவர். இங்ஙனம் அவர் ஏழைச் சிறுவர்கள் ஒழுக்கத்தினும், கல்விப்பயிற்சியினும் முன்னேற்றமடைவதற்கான போதனாமுறையில்தம்கருத்தையும் காலத்தையும்செலவழித்து வந்தனர்; எனினும், இக்காலத்திய ஆரம்ப பாடசாலை, உயர்தரக் கல்லூரிகளிலுள்ள உபாத்தியாயர்களிற்சிலர் நிரப்பிய கல்வியில்லாதவராயிருந்தும் உபாத்திமைத்தொழில் நிலைத்தமாத்திரத்தானே நிரம்பிய கல்வியாளரெனத்தம்மை மதித்துக்கொண்டு தம்மிடத்துப்படிக்கும் மாணவர்கள் கேட்கும் கேள்விக்கும் விடைகொடுக்க முடியாது விழிப்பதுபோலல்லாமல், வேதம் ஆகமம் புராணம் நீதிநூல் முதலிய ஆராய்ச்சியிலும் தம்காலத்தையும் கருத்தையும் பயன்பெறக்கழித்து வந்தனர் என்னலாம். அவர் வேதாகமங்களை ஆராயும்போதெல்லாம் அவற்றின் உண்மைக்கருத்துகளை நடுநிலைமையுடன் உணரப்பெரிதும் முயல்வர் பெரும்பாலும் சீவகாருணியம் பெரிதா? பலிகொடுப்பதும், வேள்விபுரிவதும் அறநெறிக்கும் பொருந்துவனவாகுமா? என்பதைப் பற்றிய ஆராய்ச்சியே அவர் மனதில் ஊன்றிநின்றது. இதனைப்பற்றியே நேரும்போதெல்லாம் தமது குருவிடத்தும் கேட்பதை மறந்தும் விடார்.

நாள் செல்லச்செல்ல எவ்வகைப் பயனைக்கருதியும் யாதொரு பிராணியையுங் கொலைசெய்வது தகாத இழிந்த செயலென்பது அவர் கருத்தில் பதிந்து நிலைபெற்றது. வேதத்தினும் ஒரோவழி உயிர்க்

கொலை காணப்படின் அவ்விடைச்செருகலைப்பற்றி ஐயமுற்று அஞ்சா நிற்பர். ஸ்ரீ சங்கமேசராலயத்திற்கு நாள்தோறும் கணக்கற்றவர்வந்து எண்ணிறந்த பொருளைச்செலவுசெய்து அபிஷேக ஆராதனைகளைச் செய்விப்பதையும் பார்த்துவந்தனர். வருவோரிற் பெரும்பாலோரிடத்தும் உண்மையன்பில்லாதிருந்ததைக்காண அவர் மனம் பெரிதும் வருந்தியது.

ஒருநாள் தனபாலன் என்னும் பணக்காரனொருவன் ஆலயத்திற்கு வந்து பூசைசெய்வித்தான். வண்டிக்கணக்கான அரிசி முதலியவற்றை வரவழைத்து ஆராதனை நடத்தினான். ஏழைமக்கள் கூட்டங்கூட்டமாய்வந்து பந்திபந்தியாக உட்கார்ந்திருந்தனர். உணவு கொடுக்குந்தருணத்தில் பசிமிகுதியால் வாட்டமுற்ற முடவனொருவன் ஐயா சோறு! ஐயாசோறு! எனக்கூக்குரலிட்டான். அதனைக்கேட்டுச்சகியாத தனபாலன் அங்குவந்து அம்முடவனை வாயில்வந்தவாறு திட்டி அடிக்கவும் போயினன். அதனைக்கண்ணுற்ற நம் பசவேசருக்கு வியப்பும் விசனமும் உடன்தோன்றின. அவர் அங்கிருந்த ஒருவரைநோக்கி, "பெரும் பொருட்செலவினால் உணவுசெய்வித்து அம்முடவனையேன் திட்டுதல்வேண்டும்?" எனக்கேட்டார். அதற்கு அவர் 'ஐயா! தனபாலனுடைய இயற்கைக்குணம் அதுதான். இன்று ஏதோ இவ்வளவு செலவு செய்து அன்னதானஞ்செய்வதனால் தர்மத்தில் இச்சையுள்ளவனென்று எண்ணலாகாது. அவன் வீட்டினருகில் ஓர் பிச்சைக்காரனும் வருவதில்லை காக்கையும் அவனெச்சிலிலையைமோந்தறியா. எறும்பும் ஓர் அரிசித்துண்டத்தையுங் கவர்ந்தறியா. தவறிக்காணினும் அவன் மனஞ்சகியாது. பெரும்பாலும் மிகுதியான வட்டிக்குப் பணம் கொடுப்பதுதான் அவனது தொழில். அவனிடங்கடன் வாங்கினவருள் ஒருவராயினும் வீடுவாயில்களுடன் தப்பினவர்களில்லை. பொய்க்கணக்கெழுதிப் பொருளைப்பறிப்பதில் இவனையொத்தவர் இவ்வுலகிலில்லை. இவன் இன்றுசெய்யும் ஆராதனையும் ஆடம்பரமான அன்னதானமும் குறிப்பிட்ட கொள்ளையடித்தலைக் கருதியனவென்னலாம். இவனிருக்கும் திசையிலேயே அருளும் அன்பும் தலைகாட்ட அஞ்சுமே!' என்றார்.

இச்சமயத்தில் மற்றொருவர் அடைந்து 'ஐயா! தனபாலனது ஆடம்பரத்தைக்கண்டு மயங்குதல்வேண்டா. அவனது பெயருக்கும் தனத்தைப்பாலிப்பவன் (தேடுபவன்) என்பதுதானே பொருள்.

கொடுப்பவன் எனப்பொருள் படப்பெற்றோராவது இயற்கைத்திரு நாமமும் இட்டாரில்லையே! இன்று பாண்டியநாட்டிலிருந்து பெரும் பணக்காரரொருவர் இவவூரின்கண் வந்திருக்கின்றார். அவரதுபுதல் விக்குத்தக்க மணவாளனொருவன் வேண்டுமாம். வரதக்ஷிணை ஐம்பதி னாயிரம் ரூபாயாமே! தனபாலனுடைய புதல்வன் மணமகளுக்கு ஒத்த வயதுடையவன்தான்; ஆயினும் தனபாலன் தம்மினுஞ்செல்வத் திற் குறைந்தவனென்றும், உலோபத்தில் மிகுந்தவனென்றும் கேள்வி யுற்றுப்பின் வாங்குகிறாரென்று கேள்வி மணமகளுக்கு மணமகனை த்தேடுவதில் தந்தைக்குப் பெருங்கவலையென்பது உண்மையல்லவா? ஒத்தவயதும் ஒத்தஅழகும் ஒத்தகுணமும் ஒத்தகுடிப்பிறப்பும் ஒத்த அறிவும் அமைதியுமுடைய தக்காளொருவனைத் தேடவேண்டுவது தந்தையின் கடமை என்பதை பாண்டிய நாட்டாராகிய தமிழர் நன்க றிந்தவரல்லவா? ஆதலால் அவர், தனபாலன் இப்பொழுது இவ்வூர் க்குப் பணக்காரனாயிருப்பினும் குணக்கேடன் என்றவகையில் ஆரா ய்கின்றார் போலும்! அதற்காகத்தான் தனபாலன் இன்று தன் பெருமையைக்காட்ட ஆடம்பரமான பூசை முதலியன செய்கின்றான். இவனைப்போல் புலித்தோலைப்போர்த்துப் புல்மேயும் பொய்த்துறவிக ளையும் இந்நிலவுலகஞ்சுமக்கின்றதே! மேலும் தனபாலனைப்போன்ற சிலர் ஆகும்பலனைக்கருதி ஆலயத்திற்குவந்து ஆண்டவனையும் வேண் டுவர். இன்னும் பேராசைப்பிடித்த பேயரிற் சிலர் தன்னகத்திருக் கும் கடவுளைமறந்து புறம்பேயுள்ள சிறுதெய்வங்களுக்குச்சிறு பலி கொடுக்கவுந்துணிவர்' என்றார்.

இவற்றையெல்லாம் கேட்ட நம் பசவேசருக்குண்டான வெறுப் பிற்கும் கவலைக்கும் அளவேயில்லை. தம்முடைய குருவையடைந்து வினயமாகப்பணிந்து, எங்கும் நிறைந்த பேரறிவாளரும் பெருஞ்செல் வருமாகிய கடவுளுக்குப் பணம் வேண்டுமோ? பணிவேண்டுமோ? அறி விலார்கொடுக்கும் ஆடைபணியும் அன்னமுங்கொண்டு அவர்க்கு வேண்டிய பணியைச்செய்து கொடுக்கும் பணியாளரா? அல்லது தரகரா, வியாபாரியா அக்கடவுள்? அன்பாற் பிணிக்கும் அருட்கட லல்லவோ அவர்! இவ்வுண்மையையறியாது இவ்வுலகினர் மயங்கு வதேன்? பிறரைமயக்குவதேன்? என்பனவற்றைக் கேட்டும் தனி த்துநின்றும் பெருங்கவலையுடன் சிந்திப்பாராயினர்.

இத்தகையவுயர்குணங்களும் ஆராய்ச்சியும் ஒருங்கே அமையப் பெற்ற இளஞராகிய பசவேசரது நாவின்கண் ஞானவாணியுங்குடி புகுந்திருந்துதனது கலைஞானவிளக்கமும், இசைஞானவின்பமும் உலகத்தாரறிந்து உவக்கும்வண்ணம் ஆனந்த நடனமாடி அறிவிக்கத்தொடங்கினள்; அதனல், அவரிடத்துக்காண்பாரும் கேட்பாருமாகிய யாவரையும் பிணிக்குந்தன்மை எளிதில் நிரம்புவதாயிற்று.

தண்டமிழ் நாட்டில் ஞானசம்பந்தப்பிள்ளையார் மூன்று வயதிற் பாடவில்லையா? சங்கராசாரியர் எட்டாண்டில் வேதாந்தத்தில் பண்டிதராயினரெனக் கேட்கின்றேமல்லவா? இவையெல்லாம் பாரத நாட்டுப்பழக்கதையென விடுக்கினும், மேல்நாட்டுப் பண்டிதர்களில் 'ஜான்ஸ்டியூலர்ட்மில்' என்பவர் தம் தாய்மொழியிற் பண்டிதராயும், கிரீக், லாடின் முதலிய பிறமொழிகளிலும் பேரறிஞராயும் விளங்கினரெனக்கூறும் அந்நாட்டுச் சரித்திர நூலாராயும் நம்மவர், எட்டாண்டு இளஞ்சிறுவராகிய பசவேசரும் வேதாகம சாத்திரங்களனைத்தையும் துருவித்துருவியாராயும் பேரறிவாளராயும், அவற்றின் உண்மைக் கருத்துகளைப் பகுத்துணரும் நுண்ணறிவாளராயும், மக்கட்பிறப்பே எப்பிறப்பினுஞ் சிறந்ததெனவும் அம்மக்களாவார் ஒவ்வொருவரும் செய்யவேண்டிய கடமையும் கருமமும் இன்னவெனவும் ஆராய்ந்துணர்த்தும் ஆற்றலுடையராயும் அஞ்ஞானவிருளால் மூடப்பட்டிருந்த கர்நாடகதேயத்தில் ஞானமாகிய நிலவினைப்பரப்பத்தண் மதியுதித்தாற்போலத்தோன்றி விளங்கினர், எனக்கூறுவதை மறுக்காது ஏற்றுக்கொண்டு மகிழ்வரென்பது துணிவே.

சொற்பெருக்கு.

(திருவாளர், பண்டித அ. கந்தசாமிபிள்ளையவர்கள்.

கவர்ன்மெண்டு காலேஜ் கும்பகோணம்.)

பிரசங்கம் என்னும் வடசொல்லைச் சொற்பெருக்கு என்று தமிழாற் கூறலாம், இஃது, சொற்பொழிவு, விரிவுரை, பொருளுரையெனவும் வழங்கி வருகிறது.

நம்மவரிற்பலர் அரைகுறையானபடிப்பு உடையவராயினும் அதுவுமில்லாதவராயினும், நன்றாகப் பேசப்பழகியதிறத்தால் கேட்பவரைத் தம்வயப்படுத்த வல்லுநராகின்றனர். பல் வே று மனப்போக்கையுடைய மாந்தரனைவரையும் பேச்சாற் பிணிப்பதென்றால் அது ஒரு எளிய செயலாகுமா?

ஆகையால், பேசுவதற்கும் ஒருமுறையுண்டு; சில இன்றியமையாத இயல்களையறிந்து பயில்தல்வேண்டும். இவற்றில் வல்லுநரே பிறரைத்தம் வயப்படுத்துந் தகையினராவரென்றிதனாலறிகிறோம்.

" அவன் என்ன படித்திருக்கிறான் ? அவனுக்கு என்ன தெரியும்? பேதைமாந்தர் அவ்வளவு விருப்பம் வைத்துக்கேட்டுக் கொண்டிருக்கின்றனர் " என்று கூறுவதெல்லாம் பொறாமையின்பால், அறியாமையின்பாற்படுமேயன்றி உண்மை கூறுவதாகாது.

சிலர் நிரம்பக்கற்றுவைத்து பேசப்பழகாத குறையால் அத்தனையாக அனைவராலும் மதிக்கப்படுவதில்லை. அதனால், அவர்கள் பிறரைக்குறை கூறாது, " ஏதிலரை நோவதென் " என்றிருப்பர்.

இதனாற் பேச்சுவேறு, படிப்புவேறு என்பதுணருகிறோம். இவற்றில், பேச்சை விடவும், படிப்பே உண்மையான மதிப்பும், சிறப்பும் உடையதாகும். மலர்ந்து மணம்வீசும் **பூமாலையை** விடவும், விளங்கியொளி வீசும் **பொன்னரிமாலையே** சிறந்ததாம். இன்னும், உள்ளீடு ஒன்றுமின்றி வெளிப்பாட்டாய் ஆடையணிகளால் மினிக்கியுலவும் மாந்தரினும், கல்வி, அறிவு, நிறை, ஒழுக்கம், மானம், பொறை பெருந்தகை உடையவர்கள் எளிய உடையினரேயாயினும் சீரியராகப் பாராட்டப்பெறுவர். எனினும், உலகம் இவ்விருவகையினையுமே தனித்தனிப்பாராட்டா நிற்கும்.

" சொற்களையடுக்கடுக்காய்த் தொடுப்பதும், அழகுபட மொழிவதும், இன்னோசையாய் இழுமென நம்செவி வீதியில் தடையின்றிச் செல்விப்பதும் ஆகிய இவர்தம் பேசுந்திறன் என்னே! என்று **வெற்றுரையையும்** புகழும். அன்றி " எத்தகையதோர் அரும் பொருள்! என்ன ஆராய்ச்சி! எவ்வளவு ஆழ்ந்த கருத்துக்கள்! உயர்ந்த எண்ணங்கள் !" என்று **பொருட்டிறத்தை மட்டும்** பாராட்டிப்புகழும்.

இதனைப்புலவர் பெருமானாகிய **கச்சியப்பமுனிவர்**

" சித்திரம் பிறங்கச் செம்பொனிற் குன்றி
செறிப்பினுஞ் செய்கையே விழைவோர்
ஒத்ததின் றிதற்கென் றுவப்பரால்; கூடத்
தொளிர்மணி யழுத்தினும் மணியின்
உத்தமம் விழைவோர் அதனையே மதிப்பர்;
உரைத்தவென் கிளவியாற் சிலர்தாம்
கைத்தன ரேனும் பயனுறு மனத்தோர்
கைக்கொள்வர் மான்மியச் சிறப்பால்"

என்று உவமைவாயிலால் விளக்கிக்காட்டினர்.

இதன் கருத்து :— கைவல்லான் ஒரு பொற்கொல்லன் அரிய வேலைப்பாடோடு செம்பொன்னில் ஒரு குன்றிமணியையழுத்தியிழைத்ததொரு அணிகலனைக்காண நேரின், குன்றிமணியின் இழிவைப் பொருட்படுத்தாது அவ்வேலைப்பாட்டினையே பாராட்டுவர் அத்தொழில் நுட்பமறிந்தோர்; அல்லது கையறியானொரு பொற்கொல்லன் விலைவரம்பிகந்ததொரு முழுமணியை வைத்தழுத்திக்கட்டிய, வேலைப்பாடொன்றுமேயில்லாத ஒரு அணிகலனைக்காணநேரின் அந்த மணியின் அருமைபற்றியதனையும் பாராட்டுவர் உலகினர்; ஆதலால் சொல்லுந்திறனறியா எனது மொழியாகிய இந்நூலையும் பேரூர் மான்மிய மாதற்சிறப்புநோக்கி மேற்கொள்வர் மேலோர் என்பதாம்.

எனவே பேசுந்திறனும் வாய்ந்து, உறுதிபயக்கும் பொருட்செறிவும் உடையதாயின் **அச்சொற்பெருக்கே** மிகமிகப்போற்றற்குரியதாகும்; அது, பொன்னரிமாலை நறுமணமும் பெற்றதுபோல்வதாகும். நம் குமரகுருபர அடிகளாரும் இதனையே " **பொன்மலர் நாற்றமுடைத்து** " எனத்தெரித்தருளினர்.

இன்னும் இதற்குப்பன்மாண், பெருந்தகையாளர் உயரிய ஆடையணிகளும் புனைந்து உலவுந்தோற்றத்தினையும் இதற்கு உவமைகூறலாம். " **சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பெய்தது**," "**பாற்குளத்தில் தேன்வெள்ளம் பாய்ந்தது**" என்பன கூறலுமாகும்.

மாந்தரைப்புதிய நினைப்பூட்டல், கோபமூட்டல், வீரமூட்டல், மேல்நிலைக்குயர்த்தல், தாழ்நிலைக்கிழுத்தல், பயனின் மாக்களாகச்செய்

தல் முதலிய எவ்வண்ணம் திருப்பவேண்டினும் அவ்வண்ணம் செய்ய வல்லவை இச்சொற் பெருக்குகளே.

ஆதலின் சொற்பெருக்காளர், மாந்தருக்கு உறுதிபயக்கும் தன்மையாய், நன்முடிபை விளைப்பனவாய் உள்ள சொற்பெருக்குகளையே கைக்கொள்ளற்பாலர். இச்சொற்பெருக்கின் இயல்களிற்சிலகாணலாம்.

பேசுவதற்கு எடுத்துக்கொள்ளும் பொருள்கள், சுருதி, யுக்தி, அநுபவங்கட்கு ஒத்தவையாய் இருக்கவேண்டும். யாவரும் எளிதில் அனுட்டித்தற்குரியதாயிருக்கவேண்டும். அவைகள் முன்னோர் நூலொடு மாறுபடாதனவாய் இருத்தல் வேண்டும். பேசும்பொழுது கையையாட்டல், தலையையசைத்தல் முதலிய உடற்குறும்புகள் ஒன்றும் செய்யலாகாது. பதற்றமில்லாமல் பேச்சுக்களொவ்வொன்றும் தெளிவாய் முழுஉட்சரிப்புடன் பேசவேண்டும். சொற்றொடர்கள் சிறுவருக்கும் படியாதவருக்கும்கூட விளங்கும்வண்ணம் தொடுக்கப்படவேண்டும்.

இடையிடையே, இம்ம், உம்ம், என்பதுபோன்ற ஒலிக்கலப்புக்கள் சிறிதும் கலக்கலாகாது. பொருள்கள் ஒன்றோடொன்று தொடர்ச்சியுடையதாயிருக்கவேண்டும். காரண காரிய முறைப்படி அமைத்துக்கூறப்படவேண்டும். மிக நுணுக்கமான பொருள்களும் எளிதில் விளங்கும்படி ஏற்ற திருட்டாந்ததாட்டாந்தரங்களையுடையதாயிருக்கவேண்டும். எந்தவகையிலும் பிறரைப்புண்படுத்தாதபடி அவ்வளவு பெருந்தகைமையாற் கூறவேண்டும். கவனிக்கப்படற்குறியபாகங்களை அழுத்தமாகக் கூறல்வேண்டும். இடக்கரடக்கலான சொற்களையறவே மறந்துவிடவேண்டும். தன் கூற்றுக்கும், பிறர் கூற்றாகச் சொல்வதற்கும் வேறுபாடுதோன்ற ஏற்றத்தாழ்வு காட்டும் ஓசையைக் கைக்கொள்ளல் வேண்டும். ஒன்பான்சுவைகளும் வரும்பொழுதெல்லாம் அவ்வவ்விடங்கட்கேற்றபடி முகமும் மாறிக்காட்டல் வேண்டும். மற்றபொழுதெல்லாம் முகம் புன்னகையரும்பி மலர்ந்திருக்கவேண்டும். சபையிலுள்ள பெரும்பாலோரினும் தனக்கு அதிகமான அறிவுண்டு; தன்சொல்லை யெவரும் விரும்பியேற்பர்; என்ற நம்பிக்கையும் உறுதியும் இவற்றிற்கெல்லாம் அடிப்படையாக இருக்கவேண்டும்; இந்தஒரு தன்மைமட்டும் இல்லையேல் அவருரை மேல்நாட்டு டெமாஸ்தனீஸ் என்பவரின் முதற்பிரசங்கமே போலாகிவிடும். நம் பழந்தமிழ்ப் புல

வருள் ஒருவரும் "கற்றுணதிர்ப் பிற்பொருளதிர்க்கும்" என்று இக்க ருத்தையே வற்புறுத்தினர். மேற்கோள் காட்டும் **பாடல்களைச்சிலர் போல உரை நடைபோற்** கூறலாது. பாடல்களையுரிய இராகங் களிற்பாடி மேற்கொள்ளவேண்டும். (பேச்சுக்கும் பாட்டுக்கும் வேறு பாடு தோற்றவேண்டும்.) குரலொலி மிக இனிமையாயமையப் பெற் றிருப்பது பின்னும் விசேடமே. இன்னுங்கேட்போம், பின்னுங்கேட் போம் என யாவர் மனதையுங்கவர் திறமாதல் வேண்டுமென்பது முன்னுங்கூறப்பட்டது. இவையே சொற்பெருக்கின் முக்கியமான இயல்களாம்.

நம் தமிழ்நாடு செய்த தவப்பயனுய் வந்தருளி, உடம்பு நன்னிலை யடைந்து, இன்னும் பலகாலம் நம்மையெல்லாம் உய்யக்கொண்டருள இறைவன் திருவருள் பாலிக்கவென அனைவராலும் போற்றப்பெற்று அவ்வாறே உடம்பு நன்னிலையுற்று விளங்கும் நம் அருந்தவப்பெரியார் செய்யும் பிரசங்கங்களில் சபையைக் கவனிப்போமானல், அடிக்கடி மூக்குத்தூளையுபயோகிக்கிற அம்மா (ஞ்சி) ன் சேய்கள்கூட மெய்ம்ம றந்து, கூறும் பொருளிலேயே ஆழ்ந்திருப்பதைக்காணலாம்.

அவ்வரும் பெறற்பெரியாரே, சொற்பெருக்காளர்க்கெல்லாம் **" தாம்வரம்பாகிய தலைமையர் "** ஆவர்.

அப்பெருந்தகையார் நீடுவாழ்கவென வாழ்த்துவம் வம்மின், சொற்பெருக்கின் மனங்கொண்ட தூய்மையீர்காள்.! அரனருள் வாழ்க. நலம் விளைக. தமிழ் வளர்க.

---)o(---

சு த ரு ம ம்.

(ஆஸ்தானவித்துவான், வே. சிரசி குருசாந்த சாஸ்திரிகள், மைசூர்.)

மனிதர்கள் சிறந்தஞானசாலிகளாயிருத்தலின் புருஷார்த்தங் களைத் தேடிக்கொள்வதில் மிகுந்த திறமையுடையவர்களாகின்றனர். தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் (அறம், பொருள், இன்பம், வீடு) என்பன புருஷார்த்தங்களென்று (உறுதிப்பொருள்களென்று) கூறப் படுகின்றன. இவற்றுள் மோக்ஷம் என்பது பரமபுருஷார்த்தம்என்று பிரசித்தமாகின்றது. **" ஜ்ஞானதேவது கைவல்யம் "** என்ற

சுருதிவாக்கியப்பிரமாணத்தினுல் மோக்ஷம் என்பது பிரமஞான (சிவ ஞான) த்தினுல் கிடைக்கத்தக்கது. பிரமஞானம் தர்மத்தினுல் கிடைக்கத்தக்கது. தர்மத்தை விடுத்தவராகிய மனிதர்கள் அசுத்த அந்தக்கரணத்தை யுடையவராகின்றமையால் பிரமஞானமில்லாதவராகி மோக்ஷத்தையடையமாட்டார்கள். இக்காரணத்தால் தர்மமானது மோக்ஷத்தைக்குறிக்க முக்கிய சாதனமாகி முதலாவது புருஷார்த்தமென ஒப்புக்கொள்ளத்தக்கது. யார் எந்த மதத்தை அநுசரித்தவரோ அவர் அந்த மதத்தின் தர்மசித்தாந்தங்களில் நிரூபிக்கப்பட்ட தர்மங்களை அனுட்டிப்பதில் அதிகாரிகளாகின்றனர். அவர்கட்கு அந்த தர்மங்களே சுதர்மங்கள். ஏனைய தர்மங்கள் அவர்க்கு விரோத தர்மங்கள். அறிவுடைய மக்கள் சுதர்மங்களை தேகத்தினுலும், வாக்கினுலும், மனத்தினுலும் கடக்கலாகாது. **“ஸ்ரேயாங்ஸ்வதர்மோ விகுண: பரதர்மோ பயாவஹ:”** என்ற கீதாவாக்கியம், சுதர்மத்தை மேற்கொண்டவனுல் புகழ் உண்டாகின்றதென்றும், பிறர் தர்மத்தை மேற்கொண்டவனுல் துக்கம் உண்டாகின்றதென்றும் முறையிடுகின்றது. மனிதன் தன்னுடைய சரீரத்தையும் பொருளையும் நித்தியமென்று நம்பிக்கெடலாகாது. “அநித்யானி சரீராணி விபவோ நைவஸாஸ்வத:, நித்யம் ஸந்நிஹிதோ ம்ருத்யு; கர்த்தவ்யோதர்ம சங்கிரஹ;” என்ற தர்மசாஸ்திர வாக்கியம் தேகத்தையும் செல்வத்தையும் நிலையற்றதென்றும், மரணம் நிலையாக எதிர்காலத்திலுள்ளதென்றும் எடுத்துக்காட்டித் தர்மத்தை மேற்கொள்வது முக்கியமென்றும் தெரிவிக்கின்றது. தேகாதிகளின் நிலையாமை காட்சியளவையானும் வெளியாகின்றதே! இங்ஙன மிருப்பதனுல் யாகும் சுதர்மங்களில் ஞாபகமில்லாதவராயிருத்தலாகாது. சுதர்ம விரோதிகள் பாபிகளென்று கருதப்பட்டு இவ்வுலகின்கண் பழிச்சொற்களுக்குப் பாத்திரராகி, துன்பத்தை யனுபவிப்பவராகி, பரலோகத்தில் அளவில்லாத துன்பங்களை யனுபவிப்பார்கள்.

வீரசைவமதமானது வைதீக மதங்களுள் ஒன்ருகித் தன்னைப் பற்றுகின்ற சீவர்களுக்கு முக்தியைக்கொடுக்கும் தாயகமாகின்றது. வைஷ்ணவாதி மதங்களைப் பின்பற்றிய மக்களுக்கு அந்தந்த மததர்ம சித்தாந்த கிரந்தங்களில் நிரூபிக்கப்படும் தர்மங்களே சுதர்மம் எனப்படுதல்போல, வீரசைவ மதத்தைச்சார்ந்த மக்களுக்கு ஸ்ரீ இரேணுகாதி ஆசாரியர்களால் அருளிச்செய்யப்பெற்ற தர்ம சித்தாந்த கிரந்

தங்களில் நிரூபிக்கப்பெற்றவைகளான **அட்டாவரணக் கிரியைகள், பஞ்சாசாரங்கள், அப்பிராகிருதவருணாச்சிரமதருமங்கள்** சுதர்மங்களாகின்றன. வீரசைவ மதத்தினர்கள் சுருதி சம்மதமான இலிங்கதாரண ரூபமான யாவராலும் ஏற்றுக்கொண்டு வசிக்கத்தக்கதான விரதத்தை யடைந்தவராயிருத்தலினால் "அநாராத்திய மஹாதேவம் நபுஞ்ஜீயாத் கதாசந" என்ற பிரமாணப்படி தம்மிடத்து தரிக்கப்பெற்று விளங்கும் சிவலிங்கத்தை ஆராதிக்காமல் உணவு உண்ணலாகாது ஆதலினாலும், "**ருத்ரேணாத்தமஸ்நந்தி ருத்ரேணபீதம் பிபந்தி**" இத்தகைய சுருதிப்பிரமாணமும், "பத்தியந்தி பார்ப்பிதம் சாக்கம் பக்ஷ்யமூல பலாங்கிதம் புஞ்ஜீயாத ப்ரமாதேந" இந்த சங்கர சம்ஹிதாதி பிரமாணங்களும் இருத்தலினால், அன்னமுதலியவற்றை இலிங்கத்திற்கு நிவேதித்துப் பிரசாதபாவனையினாலேயே உட்கொள்ள வேண்டியதாக இருத்தலினாலும், சிவலிங்கத்திற்கு நிவேதிக்கப்படாத பொருள்கள் தூய்மையற்றனவாதலின் அப்பொருள்களை ஏற்றுக் கொள்வதனால் தோஷமுடையவர்களாகின்றார்கள் ஆதலினாலும்; "**அஸம்ஸ்கிருதாத்மேந்திரியபூத காயைர லிங்கிபி: ஸ்வார்த்தபரைஸ்ஸகாமை:, த்ருஷ்டம் க்ருதம் ஸ்ப்ருஷ்டமதோபபுக்தம் ச்ராதாத்ய முச்சிஷ்ட மிதிப்ரசித்தம்**" என்ற விசேஷார்த்தப்பிரகாசிகா வாக்கியப் பிரமாணமிருத்தலினால் பவிகளி (அலிங்கியி) னால் செய்யப்பட்ட பொருள்கள், தின்னப்பட்ட அல்லது முகரப்பட்ட பொருள்கள் உச்சிட்டமென்று விலக்கப்படுதலின் அவற்றை இலிங்கத்திற்கு நிவேதிப்பவர்கள் அனுபவிப்பவர்கள் தோஷிகளெனப்படுவார்களாதலினாலும்; "**பக்தாநாம் ஸதநேகத்வா புஞ்ஜீயாத் பக்திஸம்யுத:**" என்ற சிவதர்ம வாக்கியப் பிரமாணத்தினால் இலிங்காங்கிகளுடைய மனையிலேயே உண்ணவேண்டுவதுவிதியென்று கொள்ளப்பட்டிருத்தலினாலும் சிவலிங்க பூசையைச்செய்து, சிவலிங்கதாரிகளால் செய்யப்பட்ட அன்னத்தையும், சிவலிங்கதாரிகளால் கொடுக்கப்பட்ட பொருள்களையுமே இலிங்கத்திற்கு நிவேதித்துப் பிரசாதபாவனையினால் உபயோகித்துக்கொள்பவராதல்வேண்டும். இவைமுதலான தர்மங்களே வீரசைவ தர்மசித்தாந்த கிரந்தத்தில் சொல்லப்பெற்றுள்ள வீரசைவ மதத்தினருடைய சுதர்மங்களாக இருக்கின்றன. வீரசைவர்களில் பலர் சுதர்மத்தைக் காப்பாற்றுகின்றவராயிருக்கின்றனர். சிலர் சுதர்மத்தை யறியாது நாவின்சுவையைப்

பெரிதாக நினைத்து அலிங்கிகளால் செய்யப்பட்ட பதார்த்தத்தை யுண்டு, பிறரைத் திருப்திசெய்வதற்கோ அல்லது உடலை வளர்ப்பதற்கோ தீயநெறியில் இறங்கிவிடுவரோ என அஞ்சுகின்றேம். அன்னுரைத் தடுக்கும்வகையில் தடுத்து சுதர்மிகளாக்கச் சமூகமும் திருவருளும் முன்னிற்பனவாகுக.

சமஸ்காரம்.

(ஆஸ்தான வித்துவான், சிரசி, குருசாந்தசாஸ்திரிகள், மைசூர்.)

மக்களாகப் பிறந்தாருள் எவர் எக்கடவுளின் சம்பந்தமான பக்தியை அடைந்திருக்கின்றனரோ, அவர் அந்த பக்தியினுல் அக்கடவுளை உபாசிப்பதற்காக, அந்த வுபாசனக்கிரமங்களை நிரூபிக்கின்ற மதத்தைப் பின்பற்றி அந்த மத சித்தாந்தத்தில் சொல்லப்பட்ட சமஸ்காரங்களை (சுத்தியை) ப்பெற்று அந்தபக்தியைப் பெருக்கிக்கொண்டு அதனுல் அந்த மதத்தின் கட்டளை ஞானத்தைச் சாதித்து முத்தராக வேண்டியது இன்றியமையாததொன்று. சிவனே — பரமாத்மா, சகல ஜகத்காரணன், முக்தியைக் கொடுக்கத்தக்கவன் என்று அறிந்து, அவனிடத்திலேயே பக்தியுள்ளவர் யாரோ அவர் சிவபக்தர் என்று சொல்லப்படுவர். சிவபக்தி எல்லாரிடத்திலும் சுலபத்தில் உண்டாவதன்று. " அநேகஜந்ம சித்தாநாம் ஸ்ரௌத ஸ்மார்த்தாநு வர்த்திநாம், நராணும் க்ஷீணபாபாநாம் சிவேபக்தி: ப்ரசாயதே" என்று சிவகீதா வாக்கியம் இருப்பதனுல் பலபிறவிகளில் சுருதி ஸ்மிருதி சம்மதமான காமிய கருமங்களைச்செய்து புண்ணியசாலிகளும் பாபமற்றவருமான மக்களுடையமனதின்கண்ணேயே சிவபக்திதோன்றுகின்றது. அவரே தம்முடைய குறிக்கோளை நிறைவேற்றிக்கொள்வதற்காக சிவபக்தகுலத்தின்கண் பிறந்து அந்த பக்தியினுலேயே வீரசைவ சித்தாந்தத்தின் உயர்பொருளாகிய அட்டாவரணக் கிரியைகள், பஞ்சாசாரங்கள் வருணுச்சிரமக் கிரியைகள் என்ற தருமங்களையும், இலிங்காங்க சாமரஸ்ய ஞானத்தையும் பயின்றுவருவதனுல் சீவன் முக்தராகி முடிவில் சாஸ்வத சிவசாயுச்சியத்தை அடைவர். இக்காரணத்தால் சிவபக்தியே சிவபக்தர்களுடையஇயற்கைக்குணமென்பதில் சந்தேகமின்று. அந்த பக்தி அழுக்கடைதல் முதலிய தோஷங்களினுல் விகாரமடையாதிருத்தற்பொருட்டே வீரசைவ சித்தாந்தத்தில் அநேக சமஸ்காரங்கள் (சுத்திகள்) சிவபக்தருக்காகக் கூறப்பட்டுள்ளன.

அந்த சமஸ்காரங்களில் கருப்பதீக்ஷை ஒன்ருகின்றது. **வீரசைவ ஸ்திதாநாந்து ஸ்தீரீணும் கர்ப்பஸ்யசப்தமே, அஷ்டமேவா குருர்லிங்கம் தாரயேத்விதிவச்சுபம் "** என, சிவாகமப்பிரமாண மிருத்தலினல் சிவபக்த குலத்தில் பிறந்த பெண் கருவுற்றிருக்கும்பொழுது, அக்கருவினுள்ள சீவனுக்காக, கருவுற்ற ஏழாவது அல்லது எட்டாவது மாதங்களில் குருவானவர் பஞ்ச சூத்திரங்களுடன்கூடிய இலிங்கத்தை விதிப்படி சமஸ்காரம் (சுத்தி) செய்து சிவகலையுடன் கூடினதாகச்செய்து அப்பெண்ணினுடைய உடலின் கண் தரித்தல்வேண்டும். இதுவே கர்ப்பதீக்ஷையெனப்பெறும்; எக்காலத்தில் கருப்பம் உண்டாகின்றதோ அக்காலமுதல் முறையாகப் பிண்டவுருவமாகித் தலை கால் முதலியவற்றை யடைந்து, ஏழாவது மாதத்தில் சீவனுடன்கூடி, எட்டாவதுமாதத்தில் எல்லாவுருவங்களும் வளரப்பெற்று, சீவசிசு என்று சொல்லப்படுகின்றது. முற்பிறப்பிலிருந்த சிவபக்தியை யடைந்து அந்தச் சிவபெருமானை உபாசிப்பதற்காகவே சிவபக்தையான பெண்ணினுடைய கருப்பத்தையடைந்த அந்த சீவனனவன் தன்னுடைய உத்தேசத்திற் (குறிக்கோளுக்) கேற்றவாறு அந்தக் கருப்பத்திலிருக்கும்பொழுதே சிவலிங்க சம்பந்தத்தையடைந்து அந்தக் குணத்தைப் பெருக்கிக்கொள்ளவேண்டுவது இன்றியமையாததாதலானும், தான் இலிங்க சம்பந்தத்தை அடையாதிருந்தால் **" மத்யபாநீ மாம்சபக்ஷீ சாங்யதேவஸ்யபூஜக:, அலிங்கீசதுராசார: பஞ்சைதேபவிந: ஸ்மிருதா: "** என்றிருப்பதனல் '**பவி**' என்று கருதப்படுவன் ஆதலானும், பவிசம்பந்தத்தை யடைந்த தாய்க்கு **"பவிஸங்காலல்லபேஜ் ஜந்து: கோடிஜன்மதப: க்ஷயம், ஐஹிகே நிந்திதஸ்ஸைவ பரத்ரநரகம் வ்ரஜேத்"** என்றிருத்தலினல் தபத்திற்கழிவும், இம்மையில் நிந்தையும், மறுமையில் நரகமும் சம்பவிப்பதாலும் **" ஸாது கார்யா வீரசைவை: கர்ப்பதீக்ஷாதி ஸம்ஸ்கிருதை: "** இத்தகைய பிரமாணங்களிருத்தலினல் கர்ப்பதீக்ஷாதி சமஸ்காரங்களையடையாத சீவன் தகரோபாசனையைச் செய்வதற்கு அருகனுகாதிருத்தலினலும், கருப்பத்திலிருக்கும் சிசுவிற்கு கர்ப்பதீக்ஷை அவசியமாகின்றது. சிவகுலத்தில் பிறந்தவராயினும் இந்த சமஸ்காரத்தையடையாதசீவர்கள் பாபிகளென்று தள்ளப்படுவார்கள். கர்ப்பதீக்ஷையைப்பெற்ற சிசு தாயினுடைய கருப்பையினின்றும் வெளிப்பட்டுவந்தபின்னர் கர்ப்பதீக்ஷாகாலத்தில்

அத்தாயின் உடலில் அச்சிசுவிற்காகத் தரிக்கப்பெற்ற சிவலிங்கத்தை யே குருவானவர் திரும்பவும் சமஸ்காரஞ்செய்து அக்குழந்தைக்குத் **தாரணஞ்செய்வது ஜாதகர்மம்** என்று கூறப்பட்டுள்ளது. குழந்தை உலகிற் பிறந்தவுடனே ஜாதகர்மம் செய்யப்படவேண்டுமென்று சித்தாந்தத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. கர்ப்பதீக்ஷையை யடையாத சிசு அப்பொழுதே பாபரூபமான பவித்தன்மையை யடைந்து அசுத்தவழியில் பிரவேசித்தது ஆதலால் அதற்கு ஜாதகர்மம் அவசியமில்லாததாகின்றது. அந்தக்குழந்தையானவன் அலிங்கியென்று கருதப்படுவதனுல் வேதாமந்திர கிரியாரூபமான சிவதீக்ஷையென்ற விசேடசமஸ்காரத்தைப் பெறுவதற்கே தகுதியற்றவனுகி, இலிங்க பூசையைச் செய்வதற்கே உரிமையில்லாதவனுகிப் பதிதனுகின்முன். ஆதலினுல், **கர்ப்பதீக்ஷ, ஜாதகர்மம்** என்ற சமஸ்காரங்களே யார் தம்முடைய குழந்தைகளுக்கு விதிப்படிச் செய்விக்கின்ருரோ அவர் அக்குழந்தையை வீரசைவ மார்க்கத்தில் பிரவேசிக்கச்செய்விப்பதனுலுண்டாகிய விசேட புண்ணியத்தை யடைவதேயன்றி ஸ்வதர்ம பாலகர் (தங்கடமையைச் செய்வோர்) எனப் புகழப்பெற்று இவ்வுலகத்தில் பெருமையை நாட்டுவதையும், பரலோகத்தில் நற்கதியைப்பெறுவதையும் தவிருது அடைவரென்பது திண்ணம். இலிங்காங்கிகளாகிய வீரசைவர்களிற் சிலர் தங்கள் சிசுக்களுக்கு உரியகாலங்களில் கர்ப்பதீக்ஷாதி சமஸ்காரங்களே நிறைவேற்றுவதில் ஊக்கமற்ற புத்தியுடையராயிருத்தலினுல் குருமார்களாகிய மடாதிபதிகளும் பிறரும் அவர்கட்கு சிவசமஸ்கார ரூபத்தைத் தெரிவித்து அவர்களுடைய குழந்தைகளேச் சமஸ்காரமுடையவர்களாகச்செய்து பக்தோத்தாரகர் என்ற புகழுக்கே பாத்திரராகவேண்டுமென்று வேண்டுகின்றேன். வீரசைவர் என்று பெயரளவில் சொல்லிக்கொள்ள விருப்பமுடையாரிற்சிலர், வீரசைவ தர்மமாகிய கர்ப்பதீக்ஷ, ஜாதகர்மம் என்னும் இன்றியமையாத சமஸ்காரங்களேத் தங்கள் குழந்தைகட்குச் செய்யாது பாபிகளாதலேயன்றிப் பிறந்த இரண்டொரு வருடம்வரையும் இலிங்கதாரணமில்லாத குழந்தையை உடன்வைத்தும் உண்ணுகின்ருர்களே! பக்தரிற் சிலர் தாரணமின்றியு மிருக்கின்றனரே! வெளிப்படையான ஆடம்பரமான அழகுபடுத்திக்கொள்பவரா வீரசைவராவர்! இக்குறையை விரைவில் நீக்கிக்கொள்ள வீரசைவ சமூகமும் குருபீடங்களும் முன்வருவனவாகுக.

வீரசைவ வைதீகத்துவம்.

(வீரமாகேச S M ஆறுமுகாரியர் வீரசைவப்பிரசாரகர் தம்மம்பட்டி)

மாண்புமிக்க பெரியீர்! தருமசாஸ்திரத்தில், யோகம் - பாஞ்சராத்திரம் - வேதம் - பாசுபதம் என்ற நான்கு மதங்கள் பிரமாணத்தையுடையனவாகின்றவென்றும், அதனால் அவைகள் யுக்திகளாற் கண்டிக்கப்படத்தக்கவைக ளல்லவென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த நான்கு மதங்களில் பாசுபத மதத்தையே சைவமதம் என்று கூறுவதுண்டு. பசு - பாசம் - பதி இந்த முப்பொருள்களின் உணர்ச்சியே பாசுபதமதம் என்கின்றனர். பசுஎன்பது சீவன். பதிஎன்பது ஈசுரன். பாசம் என்பது சம்சார பந்தம். உலகத்தில் கட்டுப்பாட்டிலகப்பட்டிருக்கிற பசுக்களை கருணையுள்ள யஜமானன் கட்டறுத்துவிடுவிப்பதுபோல பதிசப்தவாச்சியனான ஈசுரன், தம்தப் புண்ணிய பாபரூபமான வினைக்கீடாகப் பற்பல யோனித்தோற்றமென்னும் பிறவிப்பிணியால் கட்டப்பட்டுள்ள சீவர்களை அக்கட்டினின்றும் விடுவிப்பவன் என்பதே, "பாசுபதம்" என்ற சப்தத்தின் சுருக்கமான கருத்து. இந்த பாசுபதமதத்தில் வைதிக பாசுபதமென்றும், அவைதிகபாசுபதமென்றும் இரண்டு பிரிவினைகளுண்டு. இலிங்கவடிவான முத்திரையைக்காய்ச்சி உடலின்கண் தரிப்பதே அவைதிக பாசுபதம். இவர் தப்த லிங்கதாரிகளென்று கூறிக்கொள்கின்றனர். தப்தலிங்க தாரணம் வேதவிரோதமானதால் இதனை வீரசைவர் அங்கீகரிப்பதில்லை. ஸ்ரீ சங்கராசாரியரும் "அலிங்காங்கம சக்ராங்கம்" என்று தப்த லிங்காங்கனத்தைக் கண்டித்திருக்கின்றனர்; அதுநிற்க!

இன்னும் வைதிகபாசுபதமதத்தில் இலிங்கிவைதிக பாசுபத மென்றும், அலிங்கி வைதிக பாசுபதமென்றும் இரண்டு பகுப்புகள் உள்ளன. ஸ்ரீகண்ட சிவாசாரியார், அப்பையதீக்ஷிதர் முதலானவர் அலிங்கிவைதிக பாசுபத மதாவலம்பிகளாக இருக்கின்றனர். இவர்கள் பிருதிவிமுதல்சிவம் இறுதியாயுள்ள ௩௬ தத்துவங்களையும், சிவனிடத்தில் சத்தி வைலக்ஷ்ட்யத்தையும் ஒப்பினுலுங்கூட முடிவில் "மூக்தஸ்ஸிவசமோபவேத்" என்று சாரூப்பிய ரூபமான முத்தியைக் கூறுகின்றார்கள். முக்தி சாதனங்களாகிய குருலிங்க சங்கம பாதோதகப்பிரசாத விபூதி ருத்திராக்ஷ மந்திரங்களென்ற எண்வகைப்பொ

ருள்களையும், சடுஸ்தலங்களையும் அங்கீகாரஞ்செய்வதில்லை. அன்றியும் உடலின்கண் சிவலிங்கத்தைத் தரிப்பதில்லை. இன்னும் சிவதீக்ஷாபூர்வகமாகி, பஞ்சசூத்திரங்களுடன் கூடின சிவலிங்கத்தைச் சிரம் முதலான தானங்களில் விலகுதலின்றித் தரித்துக்கொண்டு பூசை செய்துவருவதே வைதிகபாசுபதமதமென்பர். இந்த மூன்று விதமான பாசுபத மதங்களுக்கே ஆசாரியர் வேறுவேறாகியிருக்கின்றனர். அவற்றுள் அலிங்கிபாசுபத விரதிகள் சுவர்க்கசாதனங்களான ஜ்யோதிஷ்டோமாதி கர்மங்களை ஒப்புக்கொள்வர். இலிங்கிபாசுபத விரதிகள் ஜ்யோதிஷ்டோமாதிகர்மங்களை ஒப்புவதின்று; அதற்குப்பதிலாக மோக்ஷசாதனங்களாகிய அட்டாவரணங்களையும், பஞ்சாசாரங்களையும், சடுஸ்தலங்களையும் அங்கீகாரஞ்செய்துகொள்வார்கள். ஆதலினால் இலிங்கிபாசுபத விரதிகளென்கின்ற வீரசைவர்கள் கிரியாஞானங்களிரண்டிற்கும் சமசம்பந்தத்தை அங்கீகரித்திருக்கிறார்கள். வீரசைவர் கர்மத்திற்கே விசேடமாகப் பெருமை கூறுவதில்லை. கர்மோபாசனையைச் சிறப்பாக ஒப்புக்கொண்டால் ஞானக்கிரியைகளுக்குச் சமத்துவம் உண்டாவதில்லை. அதனால் சமசமுச்சயத்திற்கே பங்கம் உண்டாகிறதென்று கர்மங்களை நீக்குவதுமின்று. ஆனால் சுவர்க்காதி சாதனங்களான ஜ்யோதிஷ்டோமாதி கர்மங்களைமாத்திரம் அங்கீகரிப்பதில்லையேயன்றி முக்திக்கு அங்கங்களான கர்மங்களை ஏற்றே ஏற்றுக்கொள்கின்றனர். உலகத்தில் யாருக்கு எப்பயன்கண் இச்சையுள்ளதோ அப்பயனுக் கனுகுணமான கிரியையைச்செய்தே தீரவேண்டும். வீரசைவர்கள் “சிவஏகோத்யேய: சிவம்கர சர்வமந்ய: த்பரித்யஜ்ய” “ஏக ஏவருத்ரோந த்விதீயாய தஸ்தே” இத்தகையசுருதிவாக்கியங்களினால் கேவலசிவோபாசகராகி, சிவசாயுஜ்ய ரூபமான பலத்தைமாத்திரம் விரும்புவதனால் அத்தகைய சிவசாயஜ்ய சாதகங்களான கர்மங்களைச் செய்கின்றார்களேயல்லது இதர கர்மோபாசனைகளைச் செய்வதில்லை. கர்மங்களில் பசுகர்மங்களென்றும், பதிகர்மங்களென்றும் இரண்டு பாகங்களுண்டு. சுவர்க்க சாதனங்களான கர்மங்களே பசுகர்மங்கள். பூர்வமீமாஞ்சையிற் கூறப்படும் ஜ்யோதிஷ்டோமாதி கர்மங்களெல்லாம் பசுகர்மங்களிலேயே சேரும். உபநிஷத்துகளில்கூறப்படும் கர்மங்கள் யாவும் முக்திசாதகமான கர்மங்களாகின்றமையால் இவைகளனைத்தும் பதிகர்மங்களெனப்பெறும். சிவார்ச்சனை, சிவநிர்மாலியஸ்வீகாரம், அஷ்டாவரணம், பஞ்சாசாரம், சடுஸ்தலம் முதலானவைகள் உபநிஷத்துகளில் விளக்க

ப்பட்டிருத்தலினாலும், இவைகள் கேவலம் (தனிமையில்) பதிகர்மங்களேயாவதனாலும் பதிகர்மங்களை மேற்கொள்பவரே வீரசைவர் என்று சொல்லப்படுவர்.

" ஹ்ருதப்ஜமத்யே லிங்கம்த்ருத்வா ஜ்யோதிஷிஸம்விசந்தி, அத்யாஸ்ரமஸ்தா: பரிமுச்யந்திசர்வே லிங்காங்கசோபா மோக்ஷமார்க்கைகநிஷ்டா: சிவப்பிரசாதாத் பரிமுச்யந்தி ஸர்வே "

சிவலிங்கதாரணம், சிவப்பிரசாதங்கொள்ளல் முதலியவைகளே சிவசாயுஜ்யத்திற்கு மேலான சாதனங்களென்று வேதாந்தசாரோபநிஷத்தில் இந்த பதிகர்மங்களைச்செய்தல் விளக்கமாகக் கூறப்படுவதல்லாமல் சிவாகமங்களிலெல்லாம் சிறப்பாகக் கூறப்பட்டிருக்கின்றது. மோக்ஷைகபரராகிய இந்த வீரசைவர்கள் பதிகர்மங்களென்னும் அட்டாவரணாதி கிரியைகளை மாத்திரம் அனுட்டிக்கவேண்டுமேயன்றி பசுகர்மங்களென்னும் ஜ்யோதிஷ்டோமாதிகளைக் கொள்ளலாகாதென்று " அஷ்டாவரண ஸம்பந்ந: பஞ்சாசார பராயண: வைதிகம் கர்மதுர்வீத ஜ்ஞானைகபலசாதனம் " இதுபோன்ற பலபிரமாணங்களால் பகவத்பாதர் பதிகர்மாசரணையை உறுதியாகக் கொண்டுள்ளனரன்றோ!

இந்த இரண்டு கர்மங்களும் வேதத்திற் கூறப்பட்டனவாயினும் வேதங்களில் சொல்லப்பட்ட எல்லாக்கர்மங்களையும் எல்லாமதத்தரும் எப்பொழுதும் அனுட்டிப்பதில்லை. வேதம் என்பது ஓர் பெரிய இரத்தினக்கடைபோலிருக்கின்றது இரத்தின வியாபாரத்திற்குச் செல்பவர் தத்தமக்கு உரியவைகளான இரத்தினங்களை ஆராய்ந்தெடுத்துக் கொள்வரேயன்றிக் கடையிலுள்ள இரத்தினங்களையெல்லாம் எடுத்துக்கொள்ளமாட்டார்கள். கடைகளில் கொள்ளற்பாலனமணிகளுடன் கொள்ளற்பாலனவுங்கலந்திருக்கும். அவரவர்க்கு வேண்டிய மணிகளை ஆராய்ந்தெடுத்துக்கொள்வது அவரவர் அறிவினியற்கைக்கேற்றபடியாகின்றது. அதனால் மிகப்பரந்த வேதமாகிய கடலுள் மிகச்சிறந்த மாணிக்கங்களெனவிளங்கும் சிவோபாசனையையும், சிவோபாசனா சாதனங்களையுமாத்திரம் வீரசைவர்கள் எடுத்துக்கொண்டிருக்கின்றனர். " நகர்மணா நப்ரஜா " இத்தகைய சுருதிகளுங்கூட பசு

கர்மங்களை விலக்குகின்றனவேயன்றிப் பதிகர்மங்களை விலக்குகின்றன வன்று. இரண்டு கர்மங்களையும் விலக்குகின்றனவென்று கூறுவதனுல் " வித்யாஞ்சாவித்யாஞ்ச யஸ்தத்வேதோபயகாம்ஸ:, அவித்யயாம்ருத்யுந்தீர்த்வா வித்யயாம்ருதமஸ்நுதே" என்று ஞானகர்மங்களிரண்டும் இன்றியமையாதனவென்று கூறும் ஈசாவாஸ்யோபநிஷத்திற்கே வையர்த்தியத்தைக்கூறவேண்டுவதாகின்றது. அதனுல் கர்மங்களை விலக்குகின்ற சுருதிகளுக்கு அவை பசுகர்ம சம்பந்தமானவையென்று பொருள்கூறி, மற்றைய சுருதிகளுக்கே ஏற்றுக்கோடல் கூறுவதுதக்கதாகின்றது. இப்படிப் பொருள் கூறுவதனுல் " வைதிகம் கர்மதுர்வீதஜ்ஞாநைகபலசாதநம் " இத்தகைய பிரமாணவாக்கியங்களுக்கேபயனுண்டாகின்றது. இதுவே வேதமதமாகின்றது. ஆதலினுல் வீரசைவமதப் பற்றுடையவர்கள் தம்முடைய மதத்தாபனுசாரியர் சுருதிகளபிப்பிராயப்படி சித்தாந்தஞ் செய்திருக்கின்ற கிரியாஞான சமசமுச்சயத்தைப் பின்பற்றி நடந்து ஸ்ரீபரமேசுவரனுடைய கருணைக்குப் பாத்திரராகி இகபரசுகங்களையடையவேண்டுமென வரைந்துள்ள பிரபா ஆசிரியர் கட்டுரையினுல் தர்மசாஸ்திரத்தில் பிரமாணமாகக் காணப்படும் யோகமுதலிய நான்கனுள் பாசுபதமதமே சைவமதமென்றும், அது அவைதிகம் வைதிகம் என இருவகைப்படுமென்றும், அவற்றுள், தப்தலிங்கதாரிகளே அவைதிகரென்றும், வைதிகபாசுபதத்துள் அலிங்கியாகிய சைவர்ஜ்யோதிஷ்டோமாதி பசுகர்மங்களைக்கொள்வரென்றும், இலிங்கியாகிய வீரசைவர் பதிசம்பந்தமான கிரியாஞானங்களிரண்டையும் மேற்கொள்பவர் என்றும், இவர்க்கு வேதாகமங்களிரண்டும் பிரமாணங்களென்றும் ஆராய்ந்தறிந்து வீரசைவமத சித்தாந்தத்தை மேற்கொள்ளவேண்டுமென வேண்டுகின்றேன்.

—)o(—

வீரசைவ விசேட இலக்கணம்.

(முன்தொடர்ச்சி.)

" த்விஜோவா த்விஜநாரீவா த்யக்த்வா ஸ்ரீலிங்கபூஜநம்
யதிபும்க்தே ததாயோநிம் சாண்டாலம் ப்ராப்யதேத்ருவம்"

வீரசைவ குலத்திற்பிறந்த ஆண்மகனுயினும் பெண்மகளாயினும் சிவலிங்கபூசையைச் செய்யாமல் உணவினை உண்பரேல் சண்டா

ளப்பிறப்பு உண்டாகுமென்று கூறப்படுவதனுல் ஆண்பெண் இருபாலாரும் தவருமல் சிவலிங்கபூசையைச் செய்யவேண்டுமென்பது உறுதியாகின்றது.

" நாங்ய தேவார்ச்சகாங் மர்த்தியாங் பூஜாகாலே நிரீக்ஷயேத் " என்ற சித்தாந்த சிகாமணி வசனப்படி வீரசைவர் சிவபூஜாகாலத்தில் பவி (வீரசைவரல்லாதவர்) களைப் பார்க்கலாகாதெனக் கூறப்படுவதனுல் அவர்களுடன் பேசுதலுமாகாதெனப் பொருள்படுகின்றது.

'எவன் பஸ்மத்திரிபுண்டர தாரணமும் உருத்திராக்ஷ தாரணமும் இல்லாமல் சிவபெருமானைப் பூசிக்கின்றுனே அபபடிப்பட்டவனுக்கு அப்பெருமான் பலத்தைக் கொடுப்பதில்லை, என்பதனுல் வீரசைவர்கள் சிவபூசைசெய்யுங்காலத்தில் விபூதித்திரிபுண்டர தாரணமும் உருத்திராக்ஷ தாரணமும் உடையவர்களாயிருத்தல்வேண்டும். " அங்யஹஸ்தஸ்திதம்பஸ்ம நஹிதார்யம் த்விஜாதிபி : " என்ற நூல் பிரமாணத்தால் வீரசைவர்கள் பிறர்கையிலிருந்து விபூதியை வாங்கித் தரித்தலாகாது என்பதனுல், எப்பொழுதும் விபூதியைக் கைவசத்தில் வைத்திருத்தல்வேண்டும்.

சிவதீக்ஷாசம்பன்னரான வீரசைவர்கள் சிவபூசை செய்யுங்கால் தமக்கு உதவிபுரிபவர் வீரசைவ மரபிற்பிறந்தவராயினும் சிவதீக்ஷைபெற்று சிவபூசையைச் செய்யாதவராயின் அவர் கொண்டுவரும் திருமஞ்சனமும், பத்திரபுஷ்பமுதலியவும் அவர்செய்யும் அன்னமும் சிவபூசைக்குரியனவென அறியாது கொள்ளினும் நரகத்தையடைவராதலின் தீக்ஷைபெற்றுச் சிவபூசை செய்பவரையே எவ்விதவுதவிக்கும் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.

வீரசைவரில் ஓராண்மகன் சிவபூசையைச் செய்பவனுயினும் அவனது வாழ்க்கைத்துணையாகிய மனையாள் சிவதீக்ஷைபெருதவளாயிருப்பின் அவனது பூசைமுதலியன பலனற்றனவாகின்றன; அன்றியும் அவனதுமனையின்கண் உண்பவரது தபசும் பூசையும் அழிவடைகின்றனவென்பதில் ஐயமில்லையென ஆகமங்கள் முறையிடுகின்றன. வீரசைவமதமே சிவபூசை முதலிய உத்தம கருமங்களினும் பெண்களுக்கும் உரிமை கொடுத்த உயர்மதமன்றே !

(தொடரும்.)

நமது பத்திரிகையின் முன்னேற்றம்.

சமயாபிமான சீலர்களே! உலகத்தில் எந்தநாடு எந்தசமூகம் எவ்வகையானுஞ் சிறந்து விளங்குவன என்னும் வினுக்களை நிகழ்த்துவோமாயின், எந்த நாட்டில் ஆயிரக்கணக்கான பத்திரிகைகள் உலவுகின்றன? எந்த சமூகம் நூற்றுக்கணக்கான பத்திரிகைகளை ஏற்று ஆதரிக்கின்றன? அந்த நாடே அந்த சமூகமே சிறந்து விளங்குகின்றன என்னும் வினுவிடையே மிக விரைவில் செவியில் அறையப்படுகின்றன. இக்காலத்தில் மக்களது மனவெழுச்சியைத் தட்டியெழுப்புங் கருவி பத்திரிகை யொன்றே யென்னலாம். நமது பாரதநாட்டினும் தேசமுன்னேற்றத்திற்கென உழைத்து உலவும் பத்திரிகைகள் பல. அவை நிற்க சமூக முன்னேற்றத்திற்கென வுழைக்கும் பத்திரிகைகளும் பல நிலவுகின்றன. சமயவுணர்ச்சியும் சமூக முன்னேற்றமுங் கருதிய பத்திரிகைகளுள் நமது "வீரசைவமும்" ஒன்றே. ஏனைய பத்திரிகைகள் சமயப்பெயரையோ சமூகப்பெயரையோ தாங்கிக்கொண்டு வெளிவந்தவுடன் அந்தந்த சமயத்தாராலும் சமூகத்தாராலும் பேராவலுடன் ஏற்று ஆதரிக்கப்படுகின்றன. ஏனைய மதத்தினர் தம்தம் பத்திரிகைகளைத் தேடிப் பெற்று அவற்றுள் நிறைந்த அரிய பெரிய கருத்துக்களாகிய நறுந்தேனைமாந்தி நாள்தோறும் ஆனந்தமெய்துகின்றனர். அப்பத்திரிகைகளாகிய குழந்தைகள் ஆண் பெண்பாலராகிய பல்லாயிரவரால் ஆதரிக்கப்பெற்று வளர்ச்சியுறுகின்றன. சந்தாதாரர்கள் தொகை பெருகவே வருவாயும் பெருகுகின்றன. வருவாய்பெருகவே அவற்றின் வினைநிகழ்ச்சியும் ஆக்கமும் வளர்கின்றன. இவ்விரண்டும் பெருகவே அவற்றை நடத்தும் ஆசிரியர் முதலானோர் ஊக்கமும் பெருகப் பல அரிய கருத்துக்கள் வெளிவருகின்றன. நமது வீரசைவ சமூக முன்னேற்றத்திற்கெனத் தோன்றும் வீரசைவம் என்னும் பத்திரிகை பிறந்து பத்துத்திங்களாயின. இதுவரை சேர்ந்துள்ள சந்தாதாரர்களின் தொகையைக்கூறின் நம்மை யாரும் எளிதில் எள்ளி நகையாடுவர்! நமது சமயத்திற்கென வெளிவரும் பத்திரிகைகள் பலவில்லையே! இதுவரையும் ஒன்றுதானே! இத்தமிழ்நாட்டில் வீரசைவர் பல்லாயிரவர் இருக்கவில்லையா? பல மடாதிபதிகள் இருக்கவில்லையா? இருந்தென்ன! அவர்கள் தமது பொருட்பெருக்கையும் சமயஞானத்தையும் இதுவரையும் வெளியிட்

டாரில்லையே! அந்தோ நமதுசமயத்தாரின் ஒற்றுமையும் ஊக்கமும் இருந்தவாறென்னே! இவற்றிற்கெல்லாம் காரணம் இந்நாட்டு வீரசைவர்களில் கொண்டுள்ள பயனற்ற உயர்வு தாழ்வென்னும் உணர்ச்சியா? அல்லது கல்விப்பயிற்சியின் குறைவா? அல்லது சமயமாண்புணராமையா? அல்லது மடாதிபதிகளின் பிரசாரக்குறைவா? என்னின், இவையாவுமின்று; பொருளின்மையே காரணமென்பரேல் ஏனைய வழியில் பொருட்செலவை நோக்க அதுவும் பொருத்தமுடையதன்று.

தமிழ்நாட்டு வீரசைவ சித்தாந்த மகாசங்கம் ஆறுவருடமாகப் பலவேலைகளைச்செய்துவருகின்றது. வீரசைவமும் பத்துமாதமாகத் தனது அரியகருத்தை வெளிப்படுத்திக் கடமையைச்செய்துவருகின்றது. நம் சமயத்தினர் இத்தமிழ்நாட்டில் ஏனையரைப்போல் முன்னேற்றமடையவோ பலவாண்டுகள் செல்லவேண்டும்போலும். அறிவிற்சிறந்த பெரியார் பலர் வாளாவிருத்தல் தகுதியன்று. நமக்குள் சிறுபான்மையாகத் தோன்றும் வேறுபாட்டைக்கருதாது சமயமுன்னேற்றம் ஒன்றையே பொதுப்படக்கருதிப் பலரும் முயற்சிசெய்தல் வேண்டும். முயற்சியுடையார் இகழ்ச்சியடையாரன்றோ? இந்நாட்டி லுள்ள மடாதிபதிகளும் மற்றவரும் பாஷைமுதலிய எவ்வித வேறுபாட்டையுங் கருதாது தாமின்புறுவது உலகின்புறவேண்டுமென்னும் பொதுநோக்குடன் முன்னேற்றத்திற்கான முயற்சியைச் செய்தல் வேண்டும். பொம்மயபாளயம் மகாசந்நிதானம்அவர்கள் நமதுபத்திரிகையை ஆதரிப்பதுடன் பெரும் பொருட்செலவில் சங்கத்தையும் நடத்தி வருவதைக்காண பாரதநாட்டு வீரசைவரனைவரும் பெருமகிழ்ச்சியடைகின்றனர். ஆயினும், மைலத்தில் சுவாமிகளுடைய அதிகாரத்திற்குட்பட்ட சிலவீரசைவ குடும்பத்தினர் இருக்கின்றனர். அவர்களில் ஒருவர் வீட்டிலாயினும் வீரசைவப் பத்திரிகையென்னும் திருமகள் இதுவரை குடிபுகுதாதிருப்பதைக்காணப் பெரிதும்விசனிக்கத்தக்கது. சுவாமிகள் அவரனைவர்க்கும் இலகுவான ஆணையிடினும் அவர்களில்லந்தோறும் வீரசைவம் உட்புகுந்துலவுமென நினைக்கின்றேன். இன்னும் பொம்மபுரம் மடத்தைச்சார்ந்த சிஷ்யராகிய வீரசைவரனைவர்க்கும் பத்திரிகை வாங்கிப் படிக்கவேண்டுமென ஓர் கட்டளையிடின் ஆயிரக்கணக்கான பத்திரிகை செலவாகுமென்பது திண்ணம். பத்திரிகை படித்தாலன்றோ அவர்கள் திருத்தமடைவர்.

இத்தமிழ்நாட்டில் விருத்தாசலத்தில் ஸ்ரீ குமாரதேவர் மடாலயத்தில் எழுந்தருளியிருக்கும் துறையூர் பெரியமடம் ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் பொருட் பெருக்கமும் செல்வாக்குமுடையவர்களே. அவர்கள் முயற்சி அந்நாடெங்கும் பயனளிக்குமல்லவா? திருப்பாதிரிப்புலியூரின்கண் திருக்கோவலூராதீனம் ஸ்ரீமத் சிவசண்முகமெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் நிகரற்ற கல்விப்பெருக்கும் கருதியமுடிக்கும் ஆற்றலுடையவர்களாக விளங்குகின்றார்களே; அவர்கள் வாக்கு தமிழ்நாடெங்கும் ஏற்கத்தக்கதல்லவா! அங்குள்ள ஸ்ரீமான் உருத்திரசாமி ஐயரவர்களுடைய முயற்சி தம்மினத்தாரையெல்லாம் பிணிக்குந் தகையதல்லவா! சென்னையில் ஸ்ரீமான் நாசி செட்டியாரவர்கள் இருவகைச் செல்வமும் நிரம்பிய பெரியாராதலின் அவர்கள் செல்வாக்கால் அம்மாநகரின்கண் சந்தாதாரர்களுடைய தொகை பெருகலாமல்லவா?

வேலூரில் வீரசைவர் பலரிருக்கின்றனர். அவர்கள் சமயவுண்மையில் தமது கருத்தைச் சிறிதுஞ் செலுத்தாதிருக்கின்றனர். அங்குள்ள திருவாளர் சண்முகய்யர் என்பவர்கள் முயன்றால் பலபேர் முன்வரலாமே? அந்தந்த பக்கங்களிலுள்ள பெரியார் ஒவ்வொருவரும் குறைந்தது 100 சந்தாதாரர்களையாவது சேர்ப்பது தமதுகடமையெனக்கொள்வாராயின் சிலநாளில் ஆயிரக்கனக்கான சந்தாதாரர்கள் சேரக்கூடுமே! சமயவுணர்ச்சியாகிய நல்லிரத்தம் நம்மவரது உடல்தோறும் மிகவிரைவில் பரவுதல்வேண்டும். பொதுநோக்கமான நறுமணம் எங்கும் கமழ்தல்வேண்டும். வீரசைவ சமயத்தின் நிகரற்ற வுபகாரச்செயலை உலகமனைத்தும் உணர்தல்வேண்டும்.

சமயவளர்ச்சியில் முன்வந்துழைக்க விருக்கும் பெரியாரனைவரும் என் அவாமிகுதியால் இங்ஙனம் எழுதநேர்ந்தவற்றிலுள்ள குறைகளை மன்னித்து வீரசைவத்தின் முன்னேற்றத்திற்கானநன்மைகளைச் செய்வார்களென வணக்கத்துடன் வேண்டிக்கொள்கின்றேன்.

இங்ஙனம்,
வீரசைவத் தொண்டன்,
S. கந்தசாமி ஐயர்,
தேத்தாக்குடி.

தமிழ்நாட்டு நிகழ்ச்சிகள்.

மயிலம் ஸ்ரீ சுப்பிரமணிய தேவஸ்தானம்.
தனித்தலைமைபெற்ற வெற்றி.

இத்தகைய தேவஸ்தானம் இனும் பொம்மபுரம் பெரிய மடம் சிவகஞ்சி மயூராசல நிவாச யதீஸ்வரகர்த்தரும், வீரசைவ பீடாதிபருமான இராஜகுரு ஸ்ரீலஸ்ரீ சிவஞானபாலையசுவாமிகள் மகாசந்நிதானத்தின் ஆதீன பரம்பரை தர்மகர்த்தத்துவ ஆட்சியில் சிறந்து விளங்குகின்றது. இந்த தேவஸ்தானம் ஆதிமுதல் 1801-ம் வருடத்திற்கு முன்னரும் 1860-ம் வருடத்திற்குப்பின்னரும் ஷை மகாசந்நிதானத்தின் பரம்பரை யாட்சியிலிருந்துவந்ததெனக் காட்டி நிரூபிக்க, மடாலயத்திலிருக்கும் சாசனங்களும், இப்பொழுது பட்டத்தமர்ந்தருளும் **18-வது பட்டத்து ஸ்ரீசுவாமிகள்** மேற்கொண்டுள்ள கல்விவளர்ச்சி, சமயவளர்ச்சி முதலிய அறச்செயல்களுக்கு எடுத்துக்காட்டாகவுலவும் ‘ வீரசைவம் ’ என்னுந் திங்கள் வெளியீடும் சான்றுகளாக முன்னின்று மொழிந்தமையால், சென்னை **Endovement Act** போர்டாரால் **Excepte Temple** என்று 13—9—1929-ல் விடுதலைசெய்யப்பெற்றது ; அதாவது, ‘ மற்றைய ஆலயங்களில் இருப்பது போல இந்த மயிலம் சுப்பிரமணிய ஆலயசம்பந்தமாக டிரஸ்டிகளை ஏற்படுத்தவும், சேவகர் முதலியசிப்பந்திகளை நியமிக்கவும், யாதொரு அதிகாரமும் கவர்ன்மெண்டாருக்கில்லை; எவ்வகை யதிகாரமும் ஷை சிவஞானபாலையசுவாமிகள் மகாசந்நிதானத்திற்கே உண்டு எனவும், இந்தவெற்றி வீரசைவ சமூகத்திற்கே பெருமகிழ்ச்சியை விளைக்கத் தக்கதெனவும் நமது நிறைவேற்றற்கழகத் துறப்பினரும், வழக்கறிஞருமான டெங்கணிக்கோட்டை திருவாளர் **G. சிக்கவீரப்பா** B. A., L. L. B , அவர்கள் அறிவிக்கின்றார்கள். கனம் வழக்கறிஞரது சமயவுணர்ச்சியும், ஊக்கமும் பாராட்டற்பாலன. சந்நிதானம் அவர்கள் வீரசைவ சமயத்திற்கும், சமூகத்திற்குமான பல நன்மைகளைச்செய்து புகழ்பெற நிலவுவார்களென முருகப்பெருமானருளை வேண்டுகின்றோம். சுபம்.

சென்னை வீரசைவ மாணவர் சங்கம்.

சென்னை பார்க்டவுன் இடைப்பாளையம் சந்து 2-வது இலக்க முள்ள கட்டடத்தில் சிலகாலமாக வீரசைவ மாணவர் சங்கமொன்று நடைபெற்றுவருகின்றதெனவும், அச்சங்கத்தில் 16—8—29-ல் ஓர் பொதுக்கூட்டங்கூடி, 15—8—29-ல் நடந்த சென்னை சர்வகலாசாலை பட்டமளிப்புவிழாவில் பி. ஏ. முதலிய பரீக்ஷைகளில் தேறிப் பட்டங் கள் பெற்ற வீரசைவ மாணவர்களுக்கு மகிழ்ச்சியுபசார விருந்தளிப் பொன்று நடத்தப்பெற்றதெனவும், அவ்வமயம்நடந்த தீர்மானத்தின் படி, 1—9—29-ல் மாலை 3-மணிக்கு சென்னை குருபசவா அண்டு கம்பெனி லிமிடெட் மானேஜிங் டைரெக்டர் ஸ்ரீமான் **S. C. நாகி செட்டியாரவர்கள்** தலைமையின்கண் ஒரு பொதுக்கூட்டம் கூடப் பெற்றதெனவும், அவ்வமயம் பல வீரசைவப் பெரியார்களும் மாண வர்களும் குழுமியிருந்தனரெனவும், நிகழ்ச்சிமுறை நடைபெற்ற வுடன் சென்னைமாநகரின்கண் பற்பல இடங்களிலிருந்து வந்துபடிக் கும் வீரசைவ மாணவர்களின் நலத்தைக்கருதி **வீரசைவமாணவர் விடுதி** (ஹாஸ்டல்) ஒன்றுநிறுவவேண்டுமெனத் தீர்மானிக்கப்பெற்று அபிமான சீலர்களால் 2000 ரூபாவரை வாக்களித்துக் கையொப்ப மிடப்பெற்றதெனவும், அறிந்து வீரசைவ சமூகம் பெருமகிழ்வடை கின்றது. இம்மாணவர் விடுதி நன்கு நடைபெற்று நீடூழிவாழ்க.

அறிவிப்பு.

வீரசைவ அசோசியேஷன் சென்னை.

கனந்தங்கிய வீரசைவப் பெரியோர்களே!

சென்னைமாநகரின்கண் இராஜதானியின் பலவிடங்களிலிருந்து வீரசைவமாணவர்கள் பி. ஏ. முதலிய பரீக்ஷைகளுக்குப் படிக்கவரு கின்றனர். விடுதியில்லாமையால் அவர்கள் படுங்கஷ்டம் அளவிட முடியாது. 1—9—29-ல் கூடிய கூட்டத்தில் சென்னையில் வீரசைவ

மாணவர் விடுதியொன்று அமைப்பதெனத் தீர்மானிக்கப்பெற்றது. அதற்கென நிதியும் தொகுக்கப்பெற்றுவருகின்றது. சென்னையில் வீரசைவரின் தொகை மிகக்குறைவாயிருப்பதாலும், செல்வவான்கள் சிலராயிருத்தலாலும், 50 மாணவர்கட்கானதோர் விடுதி அமைக்கப் பெருந்தொகைவேண்டியிருப்பதாலும் தங்களாலியன்ற பொருளுதவி செய்து எடுத்துக்கொண்ட நற்காரியத்தை நிறைவேற்றிவைப்பீர்களெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானிக்கப்பெற்ற முக்கிய அங்கத்தினர்.

தலைவர்,— ஸ்ரீமான் S. C. நாகிசெட்டியாரவர்கள்.

காரியதரிசிகள்,- ஸ்ரீமான் T. C. சங்கப்பா அவர்கள் பெஞ்சுகிளர்க்கு' ஐகோர்டு, சென்னை.

ஸ்ரீமான் B. பசவலிங்கையா B. A. லா மாணவர்.

பொக்கிஷதார்,- ஸ்ரீமான் S. N. மரியப்பா அவர்கள்

பொக்கிஷதார்,
வீரசைவ ஹாஸ்டல் நிதி,
46 அநுமந்தராயன் தெரு,
பார்க் டவுன், சென்னை.

குறிப்பு :— பணம் அனுப்புவோர் பொக்கிஷதாரருக்கு அனுப்பவும்.

அன்பன், S. C. NAGI CHETTI,
President, Veera Saiva Association, Madras.
(Managing Director, Messrs. Guru Basava & Co., Ltd. Madras.)

மேஸச்சிவபுரிச் சன்மார்க்க சபையின் 20-ஆம் ஆண்டு நிறைவுவிழா.

எல்லாம் வல்ல சிவபெருமான் திருவருட்டுணையால் இச்சபையின் 20-ஆம் ஆண்டு நிறைவுவிழா நிகழும் சுக்கில-ஸூ புரட்டாசிமீ சூ, எ (21, 22—9—1929) சனி ஞாயிறுகளில் சென்னை 'நவசக்தி' பத்திராதிபர் திருவாளர், திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரவர்கள் தலைமையின்பால் அறிவுடைப் பெரியார் பலர் சொற்பொழிவுநிகழ்த்த செவ்வனே சிறப்புற நடைபெற்றது. முறைப்படி கடவுள் வாழ்த்துடன் வரவேற்பு வாசித்தல், அறிக்கை படித்தல், மாணவர்க்குப் பரிசளித்தல் முதலியன நடைபெற்றபின்னர், தலைவர் முன்னுரையாக மக்களாகப் பிறந்தார் தமக்கு உடல் முதலிய பிறநலன்களைக் கொடுத்தற்கு எல்லாம் வல்ல இறைவனொருவன் உண்டென உணர்தல்வேண்டும்; உணர்தற்கு இயற்கை யறிவுடனமையாது கல்வி யறிவும் பெறுதல்வேண்டும்; அறிவுடையராய் உடல் முதலியவற்றை நன்னெறியில் லோம்பி ஒப்புரவிற் பயன்பெறச்செய்தல் வேண்டும்மென, பண்பட்ட தமிழ்நடையில் தெளிவுபெற எடுத்துரைத்தார்கள். பின்னர் திருவாரூர் போர்டு ஐஸ்கூல் தமிழாசிரியர், பண்டித திரு. R. P. அமிர்தலிங்கம் பிள்ளையவர்கள் 'நூல்களின் அவசியம்' என்பதை ஆராய்ச்சியுடனும், சிதம்பரம் அண்ணாமலை சர்வகலாசாலை ரீடர் திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை M. A., M. L., அவர்கள் 'நன்னெறி' என்பதைப் பண்புத்தொகையாகவும், பின்னர் ஆறும்வேற்றுமைத் தொகையாகவுங்கொண்டு (நன்நெறி) தொல்காப்பியர் திருவள்ளுவர் முதல் சிவப்பிரகாசர் இறுதியாகவுள்ள பெரியார் கொண்ட நன்மையான நெறியே நமது நெறியெனக் கோடல்தகுமென அரிய கருத்துக்களை யெடுத்து விளக்கியும், முசிறி போர்டு ஐஸ்கூல் தமிழாசிரியர் திரு. வீ. குமாரவீரையர் அவர்கள் 'சிவப்பிரகாசர் கவிநலம்' என்பதைப்பற்றி சிவப்பிரகாச சுவாமிகள் தமது கருத்தை ஓரிடத்தில் குறிப்புரையாகவும்

பிறிதோரிடத்தில் விரிவுரையாகவும் விளங்கவைக்கும் அருந்திறலுடையார் என விளக்க, அவர் இறைவர் சம்பந்தமாகக்கூறிய வெங்கைக் கலம்பகத்தில் "என்னடிகள் வெண்குறளே ரடியிரண்டு மென்றலையிலிருத்துமிறை" என்பதையும், ஆசாரியர் சம்பந்தமாகக்கூறிய சிவஞானபாலைய சுவாமிகள் பிள்ளைத்தமிழில் "இணையிறிரு வள்ளுவப் பெயர்கொ ளெம்மான்" என்றற் றொடக்கத்துச் செய்யுட் கருத்தையும் விளக்கி அவர் திருவள்ளுவர்பால் கொண்டுள்ள பெருமதிப்பையும் எடுத்துக்காட்டி விளங்கவுரைத்தார்கள்.

இரண்டாம்நாள் முற்பகலில் குற்றாலம் போர்டு ஐஸ்கூல் தமிழாசிரியர் திரு. ப. சிங்காரவேற்பிள்ளையவர்கள் "திருவாதவூரர் திருவுள்ளக்கிடையை இனிமைபெறவும், கும்பகோணம் கவர்ன்மெண்டு காலேஜ் தமிழ் விரிவுரையாளர், பண்டித அ. கந்தசாமிபிள்ளையவர்கள் "புதுமுறையாராய்ச்சிகள்" என்பதை மேற்கொண்டு 'பண்டைத் தமிழ்நாட்டுப் பெரியார் வகுத்த முறையனைத்தும் புதுமுறையாராய்ச்சியால் அறியவும் தள்ளவுமுடியாத கருத்துக்களை யுட்கொண்டுள்ளன' எனக் கருத்துவிளங்கவும், தஞ்சை பேதுரு உயர்தர கலாசாலைத்தமிழ்ப்பண்டிதர் திரு. பா. சிவகுருநாதபிள்ளையவர்கள் வெளியயக்கு என்பதைப்பற்றியும் சொற்பொழிவு செய்தார்கள். பிற்பகலில் திருவிதாங்கூர் திருநெறித்தொண்டர்குழாந்தலைவர் திரு. கே ஆறுமுகம்பிள்ளையவர்கள் "சமயத்தொண்டும் சைவமக்களும்" என்பதைப் பற்றி உறங்குவாரையெல்லாந் தட்டி யெழுப்பும் வீரமொழிபடவும் தஞ்சை, ஸ்கூல் டிப்டி இன்ஸ்பெக்டர் திரு ச. சச்சிதாநந்தம் பிள்ளை B. A., L T, அவர்கள் நம்நாட்டுப் பெரியார் கருத்தை மேனாட்டு அறிஞர் ஆராய்ச்சியுடன் ஒப்பிட்டுக் கற்றுய்ந்தடங்குமுறையையாரும் மேற்கொள்ளுமாறு விளங்க சமயஞானத்தைப்பற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள்.

செட்டிநாட்டில் பலகலாசாலைகள் தோன்றித் தமிழ்மணங் கமழ்தற்குக் காரணரும், எஃகுடையார் தம்முட்குழீஇ நகுதலையே உம்பரின்பத்தினும் விழுமிதாக்கொண்டு மகிழும் வளமுடையவரும்

என்றுந் திரியாத நிலையினருமான மகிபாலன்பட்டி, பண்டிதமணி, மு. கதிரேசச்செட்டியாரவர்கள் ' சமயக்கண் ' என்பதை மேற்கொண்டு கண், ஊனக்கண், அறிவுக்கண், சமயக்கண் என மூவகைப்படுமெனவும், அவை ஒவ்வொன்றும் இருவகைப்படுமெனவும், அவற்றுள், ஊனக்கண்முகத்திலுள்ள இரண்டும் புறப்பொருள்களைக் காணுந் தன்மையனவெனவும், அறிவுக்கண் அகத்திலுள்ள அருவப் பொருள்களை யுணர்தற்குக் கருவியாய எண்ணும் எழுத்துமெனவும், சைவசமயநெறியின்கண் உணர்தற்பாலனவாகிய அருட்கடலாகிய இறைவனது இயல்பையும், அன்புருவாகிய அடியாரது பணியின் தன்மையையும் உணர்ந்தமைதலே வீடுபேற்றிற்குக்காரணமெனவும், அங்ஙனம் சமயவுண்மையை யுணர்தற்கு ஆன்மாக்களது அன்பும் சிவபெருமானது கருணையுமே கருவியாதலின் அன்பும் அருளுமாகிய இரண்டுமே சமயக்கண்ணெனவும் பகுத்துக்காட்டியும், " அருளென்னும் அன்பீன்குழவி " எனபதனல் சீவர்களது அன்பின்பெருக்கால் சிவபெருமானது அருள்வெளிப்படுமுறையை விளக்கி, அன்புக்கடலாகிய திருநாவுக்கரசர்க்கு அப்பரெனவும் அருட்கடலாகிய திருஞானசம்பந்தர்க்குப் பிள்ளையாரெனவும் பெயரமைந்தகாரணகாரியத்தின் இயைபுநயத்தை " அருட்பெருகு தனிக்கடலு முலகுக்கெல்லா மன்புசெறி கடலுமாமெனவு மோங்கும், பொருட்சமய முதற்சைவ நெறிதான்பெற்ற புண்ணியக்கண் ணிரண்டெனவும்.........கூடித், தெருட்கலைஞானக்கன்று மரசுஞ் சென்று செஞ்சடை வானவர்கோயில்சேர்ந்தாரன்றே " என்னும் சேக்கிழார் வாக்கினின்றும் எடுத்துக்காட்டியும் விளக்கினமை மிகப்பாராட்டற்பாலது. ' மதிமயங்கி ' என்னுஞ் சிவபெருமானைக்குறித்த மொழியை வினையெச்சமாக்கிப் பொருள்கூறி மயங்கினர்போலல்லாது, இகர விகுதிபெற்றபெயரென (மதியைமுடித்த சிவபெருமான்) ப்பொருள்விளக்கியது பெரிதும் பாராட்டற்பாலது. தலைவர் முடிப்புரைகூற சபைத்தலைவர் திருவாளர் வ. பழ. சா. சாமிநாதன்செட்டியார் அவர்கள் தலைவர் முதலியோர்க்கு நன்றியறிதல்கூறி மாலைசூட்டி யுபசரிக்க சபை இனிதுநிறைவேறிற்று. இதனைச் சார்ந்த கலாசாலையிற்பயின்று சங்கப்பரீக்ஷையிற்றேறிய வொருவரே இக்கலாசாலையில் தலைமையாசிரியராகவிருந்து போதித்துவருதலே இதன் வளர்ச்சிக்கு ஓரறிகுறியென்னலாம். சபையும் சபையைச்சார்ந்தாரும் நன்கு நின்று நிலவுக.

நன்கொடை.

இராமநாதபுரம் ஜில்லா பலவான்குடியிலிருக்கும் நாட்டுக்கோட்டைநகர தனவைசியராகிய ஸ்ரீமான், **வே. மே. மெய்யப்ப செட்டியாரவர்கள்** நமது 'வீரசைவம்' என்னும் பத்திரிகையின் வளர்ச்சியைக்காமுதி ஆயுட்சந்தாதாரராகச் சேர்ந்து இம்மாதத்தில் ரூ. 25—0—0 கொடுத்துதவியிருக்கின்றார்கள். அவர்களது கொடைக்கு இக்கழகத்தார் நன்றியறிதலுடன் நற்புதவற்பேறுமுதலிய வளங்கள் உண்டாகவேண்டுமென இறைவனருளை வேண்டுகின்றார்கள்.

உடையார்பாளயம்தாலூகா கண்டராதித்தம் கிராமத்திலிருக்கும் மிராசுதார் பா. மொட்டயம்படையாட்சியார் குமாரர் திரு பொன்னுசாமி படையாச்சியார் திருமணத்தில் நமது மகாசங்கத்திற்கு நன்கொடையாகப் பிள்ளைவீட்டார் ரூ. 1—0—0, பெண்வீட்டார் திரு. ஆனைகுட்டிபடையாட்சியார் ரூ. 1—0—0 ஆக 2—0—0 கீழவட்டகைக் காரியதரிசி திரு P. கல்யாணவீரையரவர்கள்பால் சேர்ப்பித்து வாழ்த்துரைபெற்றிருக்கின்றார்கள். அன்னார்க்குமங்களம் உண்டாகுக.

யாழ்ப்பாணம் நல்லூர்

ஸ்ரீசுப்பிரமணிய ரதோற்சவம்.

சுக்கில-வூ ஆவணி-மீ 17-உ 1—9—29-ல் ஷை நல்லூர் ஸ்ரீசுப்பிரமணிசுவாமி ரதோற்சவம் முறைப்படி செவ்வையாக நடைபெற்றது. அத்திருவிழாவில் 8 தலைமுறையாக நடந்துவரும்வழக்கப்படி அங்குள்ள வீரசைவமடாதிபதி திரு. **நா. சி. கைலாசதேசிகர்** அவர்கள் பக்தர்குழாம்சூழ விருதுகளுடன்வந்து சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு தமது மரியாதைப்படி இரதக்கயிறு தொட்டுக்கொடுக்க வைபவத்துடன் நிறைவேறிற்று. பக்தர்களனைவரும் வந்து கண்டு கொண்டார்களென ஷை தேசிகரவர்கள் தெரிவிக்கின்றார்கள். சுபம்.

ஸ்ரீ சுப்பிரமணியர் திருவடி வாழ்க.

உ

சந்தா நேயர்கட்கோர் விண்ணப்பம் :—

பெருந்தன்மைவாய்ந்த ஐயன்மீர் !

இப்பொழுது நமது பத்திரிகையின் பத்தாவது இதழும் வருகின்றது. நமது மகாசங்கத்தின் உறுப்பினர்களிற் சிலர் பத்திரிகையின் சந்தாத் தொகையை அனுப்பிவைப்பதில் தங்கள் கவனத்தை இன்னும் திருப்பாதிருக்கின்றனர். சிலர் பொறுப்பாளர் முதலியயாரேனும் வந்துகேட்டால் கொடுத்துவிடலாமென்றிருக்கின்றனர். சிலர் மடாலயத்தின் செலவில் நடக்கிறதே நாமேன் கொடுக்கவேண்டுமென்றிருக்கின்றார்போலிருக்கின்றது. பொறுப்பாளர்வந்து வசூலிப்பதில் தடையில்லை. ஆனால் அவர் வருவதால் பிரயாணச்செலவுநேருவதுடன் தம் ஸ்கூல்வேலையும் தடைப்படுத்துமல்லவா ? சில அன்பர்கள் பத்திரிகை நிலையத்தில்வந்து அதன் சம்பந்தமான வேலைகள் எப்படி நடக்கின்றன ? வரவு செலவு எவ்வளவாகின்றன ! என்பனவாதியவற்றை நேரில் பார்ப்பாராயின் அறிவதுடன் தொழின்முறையும் இன்னபடித்தாய் நடக்கின்றது எனவும் அறிவார்கள். இகாபத்திரிகாலயங்களில பலரிருந்து செய்கின்றவேலைகள் நமது வீரசைவத்தின் வளர்ச்சிகருதிப் பொருட்செலவின்றி உபகாரமாகச் சிலரால்செய்யப்பெறுகின்றன. இவற்றையெல்லாங்கருதி நமது நேயர்கள் இப்பத்தாவது இதழைப்பெற்றவுடனாவது சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் உடனே அனுப்பிவைப்பார்களெனவேண்டியெதிர்பார்க்கின்றோம். ஆயுட் சந்தாதாரராகக் கையொப்பமிட்ட பெரியாரும் தாங் கொடுக்கவேண்டிய தொகையை அனுப்பிவைப்பார்களாயின் ஜனவரித் தொடக்கத்தில் தொடங்கக் கருதியிருக்கும் செயல் செவ்வனே நடைபெறுவதற்கு உதவியாயிருக்குமென்பதை ஞாபகத்திற்குக் கொண்டுவரவேண்டுமென வேண்டுகின்றோம். பத்திரிகை சம்பந்தமாக அறியவேண்டுவோர் ரிப்ளைகார்டு அனுப்பி விடையறிவது இலகுவாகும்.

இங்ஙனம்,

பத்திராசிரியர்.